விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

Dishtv
பழைய Dishtv
ரிசீவர்க்கு பதிலாக
புதிய ரிசீவர்
700/= மட்டுமே
SATS-TECH
(C-5441)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160

வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 29 செவ்வாய்க்கிழமை (12.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

# இனவாதிகளின் கருத்திற்கு ஏற்றவாறு அரசியலமைப்பை உருவாக்க முடியாது

## அமைச்சர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

இனவாதிகளின் கருத்திற்கு ஏற்றவாறு அரசியலமைப்பை உருவாக்க முடியாது என அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டு ள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலியை நேற்று திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பு, ஒரு இனத்திற்காகவோ, ஒரு மதத்திற்காகவோ தயாரிக்கப்பட மாட்டாது. தற்போது நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்று அவசிய 24

# மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசே இந்தியாவின் எதிர்பார்ப்பு

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தையே இந்தியா விரும்புவதாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், அண்மையில் பெங்களூருவில் நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் விசேட அதிதியாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

அதில் இந்திய துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, இந்திய ஊடக பிர 24

# வடக்கின் பிரச்சினையை தெளிவாக கண்டேன்

## யாழில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் தோர்ப் ஜோர்ன் கவுஸ்டட்சேத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களின் பிரச்சினையையும் சவால்களையும் தெளிவாக கண்டறிந்து கொள்ள முடிந்ததாக நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் தோர்ப் ஜோர்ன் கவுஸ்டட்சேத் தெரிவித்துள்ளார்.



வட மாகாண ஆளுநரை இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான நோர்வே தூதுவர் தோர்ப் ஜோர்ன் கவுஸ்டட்சேத் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்துக்கான நோர்வே பல்கலைக் 24

# பெற்றோல் 6 ரூபாயாலும் டீசல் 4 ரூபாயாலும் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை 6 ரூபாயாலும் டீசலின் விலை 4 ரூபாயாலும் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் 92 ஒக்ரைன் பெற்றோலின் விலை 129 ரூபாயாகவும் 95 ஒக்ரைன் பெற்றோலின் விலை 152 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்படுகிறது. டீசலின் விலை 103 ரூபாயாகவும் சுப்பர் டீசலின் விலை 126 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான

# ஐக்கிய நாடுகளின் செயல் மாநாடு நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு மாநாடு, நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு பொஸ்னியா மற்றும் ஹர்சகோவினாயா 24

# ஜனநாயக தேசிய முன்னணி விரைவில் ஆரம்பிக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களுடன் ஒன்றிணைந்த வகையில் புதிய ஜனநாயக தேசிய முன்னணி விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இதனூடாக 24

# அரிசி ஆலைக்கு சலுகைகள்

## ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்து அவர்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் 24

# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ். பல்கலை வளாகத்தில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவு தூபி பல தடைகளுக்கு மத்தியில் மாணவர்களால் நேற்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு குறித்த நினைவு தூபி நேற்று நிறுவப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இந்த தூபி அமைக்கும் பணிகள் பல்கலை மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் குறித்த பகுதியில் தூபியை அமை 24



# மன்னார் மனித புதைகுழி அறிக்கை

## வியாழக்கிழமை வெளியாகலாம்

(கொழும்பு)

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்களின் காபன் பரிசோதனை அறிக்கை நாளை மறுதினம் 14 ஆம் திகதி நிறைவு செய்யப்படும் என எதிர்பார்ப்பதாக, அகழ்வுப் பணிகளுக்கு பொறுப்பான சட்ட மருத்துவ நிபுணர் சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 23

# ஜனாதிபதியுடன் ஐ.தே.கவிற்கு எந்த முரண்பாடுகளும் இல்லை

## அமைச்சர் தயாகமகே தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எந்தவொரு முரண்பாடும் இல்லை என அமைச்சர் தயாகமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இத 24

# வாக்குறுதியை மறந்த ஜனாதிபதி

## அமைச்சர் மனோ

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது ஞாபக மறதியில் உள்ளார் எனத் தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன், ஜனாதிபதி வாக்குறுதியளித்த அநேகமான விடயங்களை மறந்து விட்டார்.

அவரால் வாக்குறுதியளிக்கப்பட்டு நிறைவேற்றப்படாத விடயங்கள் தொடர்பாக கிடைக்க 23

## இனந்தெரியாத கும்பலினால்

# வாகனம் ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

## நாயன்மார்க்கட்டு பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தில் வாகனம் ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், அரியாலை - நாயன்மார்கட்டு பகுதியில் 24



மண்டைதீவு
மகா வித்தியாலய
பழைய மாணவன்

அமரர்
**புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி**
அவர்களின்

## நினைவுகளுடன் பேசுதல் நிகழ்வு

இடம் : பாடசாலை கேட்போர் கூடம்,
மண்டைதீவு மகா வித்தியாலயம்.
காலம் : இன்று (12.02.2019) செவ்வாய்
பிற்பகல் 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— விழா ஏற்பாட்டுக் குழு



10.02.2019 அன்று யாழ் நகர் விக்டோறியா வீதியில் அமைந்துள்ள யாழ். கலாலயா பயிற்சியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் அவர்கள் கேக் ஐசிங் உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், முக ஒப்பனை, மற்றும் உடை அலங்காரம் ஆகிய பயிற்சிகளின் சிறந்த மாணவி ஒருவருக்கு கேடயம் வழங்குவதையும், பயிற்சிகளை நிறைவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மாணவிகள் பயிற்றுவிப்பாளர்களுடன் அமர்ந்திருப்பதனையும் காணலாம். (C-5460)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி முருகேசு கண்ணி



எமது கல்லூரியின்
பொருளியல் பாட ஆசான்
**திரு.முருகேசு சிறிதங்கராசா**
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **முருகேசு கண்ணி**
அவர்கள்
11.02.2019 அன்று இறை
பதம் அடைந்துவிட்டார்,

அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர் மற்றும்
கல்வி சாரா ஊழியர் நலன்புரிச்சங்கம்.
யா/இணுவில் மத்திய கல்லூரி**

(7495)


## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே



## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் உணவகத்திற்கு பணியாளர்கள் (ஆண் + பெண்) தேவைப்படுகின்றனர். திறமைக்கு ஏற்ற வேதனம் வழங்கப்படும்.

1. உணவு பரிமாறுபவர் (சப்ளையர்)
2. சுத்தம் செய்பவர் (கிளினிங்)
3. சமையல் உதவியாளர்
4. தேநீர் தயாரிப்பவர் (ரீ மேக்கர்)

தொடர்புகளுக்கு :
077 846 1024,
077 907 9888

(7492)



வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கெங்காதேவி இரத்தினசிங்கம்

எமது கலாசாலையின்
**இணை அதிபர் திருமதி சிவசக்தி
இராதாகிருஷ்ணன்** அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி **கெங்காதேவி
இரத்தினசிங்கம்**




அவர்கள் 09.02.2019 அன்று அமரரான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா இறைவன் திருவடியில் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய கலாசாலை சமூகம், கோப்பாய்.**

(C-5465)

# மரண அறிவித்தல்

## திருமதி கெங்காதேவி இரத்தினசிங்கம்



*திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி இரத்தினசிங்கம் கடந்த (09.02.2019) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான M.M.கனகசிங்கம் - கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கைலாயம் - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் (முன்னாள் அதிபர் - விவேகானந்தா மகா வித்தியாலயம், அநுராதபுரம்) பாசமிகு மனைவியும் சிவசக்தி (விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை), Dr.சிவசங்கர் (முன்னாள் இரத்தவங்கி அதிகாரி - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராதாகிருஸ்ணன் (ஓய்வுநிலை ஆசிரியர் - ஸ்தாபகர் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி), Dr.திருமகள் (MOH நல்லூர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தமிழினி (மாணவ ஆசிரியர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி) அவர்களின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சீதாதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற மாருதபுரவீகவல்லி மற்றும் ராஜேந்திரா, மகாராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2019) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

"கைலாசவாசா"
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
மகன் Dr.சிவசங்கர் - 077 209 7055
மகள் சிவசக்தி - 077 699 2082

(7496)

# பிரட்டு அலுவலகத்தில் தரம் பிரித்து திண்மக் கழிவுகளை வழங்கல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட வட்டார பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சேகரிக்கப்படும் இலத்திரனியல் கழிவுகள், திண்மக்கழிவுகளை தரம் பிரித்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் குறிப்பிட்ட நேரத்தில் வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் அருகாமையில் உள்ள பிரட்டு அலுவலகங்களில் தரம் பிரித்து வழங்கலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

## இலத்திரனியல் கழிவுகள், திண்மக்கழிவுகள் சேகரிக்க கூடிய இடங்களாவன

1. நல்லூர் பிரட்டு அலுவலகம் – சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
2. அரியாலை பிரட்டு அலுவலகம் – கனகரத்தினம் வீதி, அரியாலை.
3. வண்ணார்பண்ணை பிரட்டு அலுவலகம் – கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு சந்தி.
4. பாஷையூர் பிரட்டு அலுவலகம் – கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
5. நாவாந்துறை பிரட்டு அலுவலகம் – கடற்கரை வீதி, நாவாந்துறை சந்தை.
6. பசார் பிரட்டு அலுவலகம் – சுற்றுச்சூழல் அலுவலகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
7. குருநகர் பிரட்டு அலுவலகம் – பிரதான வீதி, மடத்தடி, யாழ்ப்பாணம்.
8. மீள்சுழற்சி நிலையம் – காரைநகர் வீதி, காக்கைதீவு
9. திண்மக்கழிவு சேகரிப்புமையம், காரைநகர் வீதி, கல்லுண்டாய்.


**ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(C-5463)

## பாதாள உலகத் தலைவன்

# மதூஷுக்கு டுபாயில் தண்டனை வழங்குவதே புத்திசாலித்தனம்

## இராணுவத் தளபதி மகேஷ் தெரிவிப்பு
## இலங்கைக்கு கொண்டு வந்தால் தப்பிக்க வாய்ப்பு



(கொழும்பு)

பாதாள உலகத் தலைவர்களுள் ஒருவரான மாகந்துரே மதூஷை கைது செய்ததன் மதிப்பு நிச்சயமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கே உரியது எனவும், டுபாய் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மதூஷ் உட்பட சந்தேகநபர்களை அந்த நாட்டிலேயே சிறையில் வைப்பதே புத்திசாலித்தனமானது எனவும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேகநபர்களை இலங்கைக்கு அழைத்து வந்தால் பல்வேறு தந்திரங்களைப் பிரயோகித்து சிறையிலிருந்து தப்பிச் செல்வதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் பாதாள உலக கூட்டத்தை ஒழிப்பதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள முயற்சி பாராட்டுக்குரியது எனவும் இராணுவத்தளபதி கூறியுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதாள உலக கூட்டத்தை அடியோடு ஒழிப்பதற்கும் போதைப் பொருள்களைக் கைப்பற்றுவதற்கும் எஸ்.ரி.எப். படைப் பிரிவின் கட்டளை அதிகாரி எம்.ஆர்.லத்தீப் எடுக்கும் ஆர்வம் மிக முக்கியமானது என்பதுடன் அவரது சேவ்வக் காலம் நீடிப்பும் விசேட அம்சமாகும் எனவும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## நாட்டைத் துண்டாடுவதற்கு புலம்பெயர் தமிழர் முயற்சி

### தேசிய பிக்கு சம்மேளனம் கூறுகிறது

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் நிறைவடைந்தாலும், நாட்டைத் துண்டு துண்டாக்க புலம்பெயர்ந்து வாழும், தமிழர்கள் முயற்சிப்பதாக, தேசிய பிக்கு சம்மேளனத்தின் தலைவர் லியன்வல சாசரதன தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை விடுதலை செய்வதற்காக பொது மக்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை கண்டியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புலம் பெயர்ந்து வாழும், தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், சில அரசியல் தலைவர்கள் செயற்படுகின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடம் கொடுக்கப் போவதில்லை.

நாட்டில் யுத்தம் நிறைவடைந்தாலும், நாட்டை விழுங்குவதற்கு, தமிழ் டயஸ்போரா காத்திருக்கிறது. நாங்கள் புத்த பிக்குகள் என்ற வகையில், சகல சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராகவே வீதியில் இறங்கியுள்ளோம், தமிழ் மற்றும் புலம்பெயர் தேசங்களிலுள்ள ஏனைய டயஸ்போராக்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நாட்டை சமஷ்டி முறையாக மாற்றி, ஒவ்வொருவருக்கும் ஏற்ற வகையில் துண்டு துண்டாக்க விடமாட்டோம்.

இதற்கு எதிராக குரல் கொடுத்து சிறையில் இருக்கும் எங்கள் தலைவர் ஞானசார தேரரை சிறையிலிருந்து மீட்க, நாம் போராடுகின்றோம். அதற்கு ஒத்துழைப்பு கொடுத்து புண்ணியம் தேடிக் கொள்ளுங்கள்" என லியன்வல சாசரதன தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நாடாளுமன்றத்தில் மின்தூக்கி செயலிழந்தமை சதிமுயற்சியல்ல

(கொழும்பு)

நாடாளுமன்றத்திலுள்ள மின்தூக்கி செயலிழந்தமை சதிமுயற்சியல்ல என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 07 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததுடன், இது சதியாக இருக்கலாம் என்று எதிரணியினர் குற்றம்சாட்டி, சம்பந்தப்பட்டவர்கள் குறித்து விசாரணை நடத்துமாறும் கோரியிருந்தனர்.

இந்நிலையில் மின்தூக்கி திடீரென செயலிழந்தமை தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும் மின்தூக்கி செயலிழந்தமையை அறிவிப்பதற்கான ஒலி சமிக்ஞை கட்டமைப்பு செயற்படாமை தொடர்பிலும் ஆராயப்படுவதாக படைக்கள சேவிதர் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் காணப்படும் ஒன்பது மின்தூக்கிகளும் தற்போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை இந்த வாரம் கோரப்பட்டுள்ளது. அதுவரை மின்தூக்கியில் ஒரு தடவையில் செல்வோரின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் காணப்படும் மின்தூக்கிகள் 35 வருட கால பழைமைவாய்ந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## டி.ஐ.ஜி லத்தீப் ஓய்வு பெறுவதை டுபாயில் கொண்டாடிய மதூஷ்!



(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீப் ஓய்வு பெறுவதைக் கொண்டாடும் வகையிலேயே மாகந்துரே மதூஷ் உட்பட அவரது சகாக்கள் டுபாய் நட்சத்திரக் ஹோட்டலில் கொண்டாட்டம் நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மதூஷின் இரண்டாவது மனைவியின் பிள்ளையின் பிறந்த நாள் கொண்டாட்டமே அன்று நடத்தப்பட்டதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகிருந்தன. இருப்பினும், டி.ஐ.ஜி. எம்.ஆர்.லத்தீபினால் ஏற்படவிருந்த ஆபத்துக்கள் நீங்கியுள்ளது என்பதை சந்தோசமாக கொண்டாடும் வகையிலேயே இந்தக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## அரசியல்வாதிகளுக்கு பாதாளக்குழுவுடன் தொடர்பு இரகசியமான விடயமல்ல

### அதுபற்றி பேசாமல் சட்ட நடவடிக்கை எடுங்கள்—முஜிபுர்



(கொழும்பு)

அரசியல் சேறு பூசல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, சில அரசியல்வாதிகளுக்கும் பாதாளக் குழுவினருக்கும் தொடர்பிருப்பதாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்படக் கூடாதென, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த சேறு பூசும் நடவடிக்கையால் அரசியல்வாதிகள் மட்டுமல்ல சில அதிகாரிகளும் பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு அரசாங்கத்திலும் சில அரசியல் தலைவர்கள் பாதாளக் குழு தலைவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தது இரகசியமான விடயமல்ல எனத் தெரிவித்துள்ள அவர், அது தொடர்பில் தற்போது பேசாமல் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மரண தண்டனைக்கு ஆயத்தம்

### தூக்குக் கயிற்றின் தரத்தை ஆராய நடவடிக்கை

(கொழும்பு)

தூக்கு மேடைக்கு பயன்படுத்தப்படும் கயிற்றின் தரத்தை ஆராய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

தூக்குக் கயிறு மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கான தரத்தில் காணப்படுகின்றதா, என்பது தொடர்பாக ஆராய்வதற்கு அதனை இலங்கை தரச் சான்றிதல் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த தூக்குக் கயிற்றின் தரம் தொடர்பாக ஏதேனும் சிக்கல் காணப்படும் பட்சத்தில், தரமான புதிய தூக்குக் கயிறை வெளிநாட்டிலிருந்து விரைவில் இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த கயிறானது, கடந்த 2015 ஆம் ஆண்டு பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அந்தத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# வூட்டும் அலியும் சேர்ந்தா தாறுமாறு... ஆட்டம் போட்ட மே.தீவுகள் கதிகலங்குது பாரு...



5 விக்கெட்டுக்களை கைப்பற்றி மே.தீவுகளுக்கு தொல்லை கொடுத்த இங்கிலாந்தின் மார்க் வூட்

மார்க்வூட்டின் வேகமும் அலியின் சுழலும் இணை சேர மே.தீவுகள் முதல் இன்னிங்ஸில் 154 ஓட்டங்களுக்கு சுருண்டது.

மே.தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றுகிறது.

முதலிரண்டு டெஸ்ட் போட்களில் வெற்றி பெற்ற மே.தீவுகள் அணி ஏலவே தொடரைக் கைப்பற்றிய நிலை யில்,

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியு மான டெஸ்ட் கிராஸ் ஐலெட்டில் நடைபெறுகிறது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 277 ஓட்டங் களை எடுத்தது. தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய மே.தீவுகள் அணிக்கு மொயீன் அலி தொல்லை கொடுத்தார். இவரது 'சுழலில்' அணித் தலைவர் கிராய்க் பிராத்வைட் (12), ஜோன் கேம்ப்பெல் (41) சிக்கினர். மார்க் வூட் 'வேகத்தில்' ஷேய் ஹொப் (1), டரன் பிராவோ (6), ரோஸ்டன் சேஸ் (0), ஷிம்ரான் ஹெட்மையர் (8) ஆட்டமிழந்தனர். ஸ்ரூவேர்ட் பிரோட் பந்தில் ஷேன் டவ்ரிச் (38) ஆட்டமிழந்தார். மொயீன் அலி பந்தில் கீமோ போல் (8), அல்ஜாரி ஜோசப் (2) சரணடைந்தனர். ஷனான் கேப்ரியல் (4), மார்க் உட் பந்தில் வெளியேறினர்.


முதல் இன்னிங்சில் மே.தீவுகள் அணி 154 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் பறிகொடுத்தது. கீமர் ரோச் (16) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் மார்க் வூட் 5, மொயீன் அலி 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின், 2வது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 2ஆம் நாள் ஆட்டநேர நிறை வில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களை எடுத்து, 142 ஓட் டங்களால் முன்னிலை வகித் திருந்தது. ரோரி பேர்ன்ஸ் (10), ஜென் னிங்ஸ் (8) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் 3ஆம் நாளா ட்டம் நேற்று தொடர்ந்தது

## உலக கிண்ணத்தை வெல்வது யார்? பொன்ரிங் என்ன சொல்கிறார்


ரிக்கி பொன்ரிங்

"இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு உலக கிண்ணம் வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது," என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்ரிங் தெரி வித்துள்ளார்.

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில், 12வது ஐ.சி.சி., உலக கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மே 30 - ஜூலை 14வரை நடக்கிறது. இதில் 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, உள்ளிட்ட 10 அணி கள் பங்கேற்கின்றன.

சமீபகாலமாக அவுஸ்திரேலிய அணி ஒருநாள் போட்டி யில் திணறி வருகிறது. கடைசியூக விளையாடிய 26 போட்டி களில், 4ல் மட்டுமே வென்றுள்ளது. இருபது போட்டியில் தோல்வியை சந்தித்துள்ளது. இரண்டு போட்டி களுக்கு முடிவு இல்லை.

இதுகுறித்து ஆஸி அணியின் துணைப் பயிற்சியாளர் ரிக்கி பொன்ரிங் கூறியதாவது.

தற்போதுள்ள நிலையில் அணிகளின் செயற்பாட்டை வைத்துப் பார்க்கை யில் இந்தியா, இங்கிலாந்து அணி களுக்கு உலக கிண்ணம் வெல் லும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

'நடப்பு சம்பியன்' அந்தஸ்துடன் கள மிறங்கவுள்ள அவுஸ்திரேலிய அணி கிண்ணம் வெல்ல தகுதியான அணி களில் ஒன்றாக திகழும். ஏனெனில் ஸ்ரீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் தடையில் இருந்து மீண்டு அணிக்கு திரும்பும் போது 'துடுப்பாட்ட' வரிசை பல மடை யும். அனுபவ வீரர்களான இவர் களது வருகை, சகவீரர் களுக்கு ஊக்க மாக அமையும். தவிர இங்கிலாந் தில் நிலவும் தட்பவெப்ப நிலை எங்களுக்கு சாதகமாக இருக்கும். இவ்வாறு பொன்ரிங் கூறினார்.

## தோனிபோல் யார் இனி? கார்த்திக்கை வறுத்தெடுத்த நெட்டிசன்கள்



நியூசிலாந்துடனான ஆட்டத்தின்போது கார்த்திக்

நீங்கள் என்னதான் முயன் றாலும் தோனியாகிவிட முடியாது என்று தினேஷ் கார்த்திக்கை நெட்டிசன்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

நியூசிலாந்துக்கு எதிரான ரி20 இறுதி ஆட்டத்தில் இந்திய அணியின் தோல்விக்கு தினேஷ் கார்த்திக் காரணம் என்ற ரீதியில் நெட்டிசன்கள் வறுத்தெடுத்து வருகின்றனர்.

ஹமில்டனில் இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி20 தொடரின் இறுதி போட்டி நடந்தது. இதில் கடைசி ஓவ ரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இலங்கையில் நடந்த நிடாஹஸ் கிண்ண ரி20 தொடரில் ஏற்பட்டதுபோன்ற சூழல் ஹமில்டன் போட்டியில் இருந்தது. ஆனால், முடிவு மட்டும் மாறிவிட்டது. பங்களாதேசுக்கு எதிரான ஆட்டத்தில் தினேஷ் கார்த்திக் காட் டடி அடித்து கடைசி பந்தில் சிக்ஸர் அடித்து அணியை வெற்றி பெற வைத்தார்.

ஆனால், நியூசிலாந்துக்கு எதிரான இந்த இறுதிஆட்டம் தலைகீழாக மாறிவிட்டது. கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இரு ஓட்டங்கள் எடுத்த நிலையில், 4 பந்துகளில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கார்த்திக், குர்னல் பாண்டியா களத்தில் இருந்தனர். ஆனால், பந்தை அடித்த கார்த்திக் ஒரு ஓட்டம் எடுத்து. ஸ்டிரைக்கை குர்னல் பாண்டியாவிடம் வழங்கி இருக்கலாம்.

ஆனால், ஸ்டிரைக்கை குர்னல் பாண்டியாவிடம் வழங்காமல் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பின்பே பின்பே ஒரு ஓட்டம் எடுத்தார். அதன்பின் கடைசிப் பந்தில் 11 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ஒரு சிக்ஸர் அடித்தார் தினேஷ் கார்த்திக்.

ஒருவேளை ஸ்ட்ரைக்கை குர்னல் பாண்டியாவிடம் கொடுத்திருந்தால், அவர் சிக்ஸரோ அல்லது பவுண்டரியோ அடித் திருந்தால், ஆட்டத்தின் முடிவு மாறியிருக் கும். ஆனால், தினேஷ் கார்த்திக் ஓட்., எடுக்கா மலும், குர்னல் பாண்டி யாவுக்கு துடுப்பாட்டம் செய்ய வாய்ப்பளிக்காதது விமர்சனத்துக்குள்ளா னது.

இந்த சம்பவத்தைப் பார்த்த வர்ணனை யாளராக இருந்த கௌ தம் கம்பீரும் கடுமை யாக ஆட்சேபம் தெரி வித்தார். இதுபோன்ற இக்கட்டான நேரத்தில் பொறுப்பை பகிர வேண் டும், ஒருவனேபொறுப்பை சுமக்க நினைக்கக் கூடாது, தினேஷ் கார்த் திக் ஒரு ஓட்டம் எடுத்து, குர்னல் பாண்டியா வுக்கு வாய்ப்பு வழங்கி இருக்கலாம் என்றார்.

தினேஷ் கார்த்திக் கின் இந்தச் செயல் சமூக வலைத்தளங்களில் பெரும்விவாதத்தை யும், விமர் சனத்தையும் ஏற் படுத்தி இருக்கிறது.

சேவைநலன் பாராட்டு



திரு.கணபதிப்பிள்ளை இரத்தினசபாபதி
( விசேட பயிற்சி {கலைத்திறன்})

எமது பாடசாலை ஆசிரியர் திரு.கணபதிப்பிள்ளை இரத்தினசபாபதி அவர்கள் 25 வருட ஆசிரியப் பணியாற்றி இன்று (12.02.2019) செவ்வாய்க்கிழமை அகவை அறுபது கண்டு ஓய்வுபெறுகின்ற இவ்வேளை சகல சௌபாக்கியங்களும் பெற்று அவரது ஓய்வுகாலம் இனிதே சிறக்க வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை,
கொடிகாமம்.

(C-5466)

அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



திரு.குணபாலன் சதீஸ்குமார்
(B.Ed, M.Ed)

எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரான திரு. குணபாலன் சதீஸ்குமார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 22.01.2019இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
யாழ்ப்பாணம்

(C-7493)



# சிலர் ஜனாதிபதியின் மேடையை விட்டு கீழே இறங்கும் காலம் வந்துள்ளது

## அமைச்சர் அர்ஜுன சுட்டிக்காட்டு

(கம்பஹா)

இலங்கையின் கிரிக்கெட் துறையை அழித்த நபர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மேடையிலிருந்து கீழே இறங்கும் காலம் வந்துள்ளதாக போக்குவரத்து. சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் கிரிக்கெட் என்பது மதம் போன்றது. அது 2015 ஆம் ஆண்டிலிருந்தே அழியத் தொடங்கியது. அதற்கு வீரர்களை மாத்திரம் குறை சொல்வதில் அர்த்தம் இல்லை. அதற்கு கிரிக்கெட் நிர்வாகத்தில் இருக்கும் தகுதியற்றவர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

தற்போது கிரிக்கெட் துறையின் வீழ்ச்சி குறித்து ஜனாதிபதி புரிந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஆனால் இன்றும் சம்பந்தப்பட்ட நபர்கள் ஜனாதிபதியின் மேடையில் இருக்கின்றனர்.

எனவே அவ்வாறான வர்களை தனது அருகில் வைத்துக் கொள்ள வேண்டாம் என தான் கோரிக்கை விடுப்பதாகவும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-7)



Facilitating the widest range of career assessment opportunities at the doorsteps, the latest edition of India Education fair 2019 would once again reach out to the students of Sri Lanka on **11 and 12 February, 2019, at The Valampuri Hotel, Jaffna organized by "SAPE Events & Media Pvt. Ltd."** supported by the **High Commission of India, Colombo, Ministry of Higher Education, Government of Sri Lanka and S.R Global Services Pvt. Ltd Sri Lanka** which is bringing a delegation of around **15 Universities** from India for **conducting an Education Seminar and Fair at The Valam puri Hotel, Jaffna from 10am to 6pm.** The focus of the event will be to **"invite students to study in India under various scholarships"**

# காரைநகரில் நாடக விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாழ்ப்பாணப் பிரதேசப் பேரவையின் ஏற்பாட்டில் நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் ஈழத்தின் நவீன தமிழ் நாடகத்தின் தந்தை குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் உருவான "உறவுகள்" மற்றும் ரஷ்ய நாடக ஆசிரியர் அன்ரன் செக்கோவினால் எழுதப்பட்டு குழந்தை ம.சண்முகலிங்கத்தால் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுப் பேராசிரியர் க.ரதிதரன் நெறியாள்கையில் உருவான "தான் விரும்பாத்தியாகி" ஆகிய நாடகங்களின் ஆற்றுகை எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். காரைநகர் இந்துக் கல்லூரியின் நடராஜா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் நாடகப் பண்பாட்டின் தொடர்ச்சியான இந் நாடக ஆற்றுகைகளைக் கண்டுகளிக்க அனைவரையும் விழா ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். (இ-7)

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும்துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.

(6730)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1948 - 09 - 27 | 2009 - 02 - 12 |



## கந்தையா மேரிலூத்து (பூமணி)

### யாழ்ப்பாணம்,நல்லூர்

தனிமைதனில் எம்மைத் தவிக்கவிட்டு
தூர எங்கே சென்றீர் அன்னையே!
அழகிய உம் வதனம் காணாமல்
ஈரைந்து வருடங்களாய் ஏங்கித் தவிக்கிறோம்
அன்பால் எமை ஆண்ட அன்னையே
ஒருமுறையேனும் முகம்காண
ஓடோடி வரமாட்டாயோ என ஏங்குகின்றோம்

(c-5461)

மணியம்மா உணவகம்
ஆனந்தபுரம் கிழக்கு
கிளிநொச்சி.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்:கலா,ஈசன்.

# இராசி பலன்

**12.02.2019**

தை 29,செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சப்தமி முற்பகல் 11.47 மணிவரை
பரணி மாலை 6.16 மணிவரை
சுபநேரம் 11.04-12.34 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
கார்த்திகை விரதம், ரத சப்தமி

வளவன்

கிரகநிலை: செவ், சந் | புத | ராகு | சூரி, கேது | சனி, சுக் | குரு

சந்திராஷ்டமம்
சுவாதி-விசாகம்
இரவு11.50 இற்கு
இடப-சந்

**மேடம்:** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை கட்டுவீர்கள், போசன சுகமுண்டு, நல்லவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக்குறைவான நாள்.

**மிதுனம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பயணத்தால் பணவரவுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றுமொரு வகையில் விரய மாகலாம், தேகநலன்கள் பாதிக்கப்படலாம்.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** உடன் பிறப்புக்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**தனுசு:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனையைக் கூறலாம்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர். வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சேமிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும்.

# பிள்ளைகள் விளையாட்டுத்துறையில் சாதிக்க பெற்றோர்கள் ஊக்கமளிக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா அறிவுரை



(யாழ்ப்பாணம் )

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமது பிள்ளைகள் எவ்வாறு சித்தியடைய வேண்டும் என பெற்றோர்கள் முயற்சிக்கிறார்களோ அதேபோல். வடமாகாணத்திலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விளையாட்டுத் துறையில் சாதிக்க வேண்டுமென ஊக்கமளிக்க வேண்டும்என்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கென வட மாகாண துடுப்பாட்ட அக்கடமியை யாழ். நீராவியடி பகுதியில் நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இளைஞர்கள் வேலை வாய்ப்பு இல்லாததன் காரணமாகவே போதைப்பொருள் மற்றும் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் பாடசாலை செல்லும் மாணவர்களை இவ்வாறான விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபட ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது மனநிலையை விளையாட்டுத் துறை சார்ந்த செயற்றிட்டங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் போதைப் பொருள் பாவனை மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபதில் இருந்து தடுக்க முடியும்.

சிறுவர்கள் பாடசாலைக்கு சென்று தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று ஏனைய பொழுதுபோக்கு செயற்பாடுகளில் ஈடுபட வளங்கள் இல்லை. அதன் காரணமாகவே இந்த வாள்வெட்டு போன்ற சமூகவிரோத செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாக வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இவ்வாறான விளையாட்டு துறையை ஊக்குவிக்கும் தனியார் நிலையங்கள் காணப்படுகின்றன.

அவர்கள் காலை பாடசாலைக்கு சென்று மீண்டு தனியார் கல்லூரிக்கு சென்று மீண்டும் அவர்கள் தமது விளையாட்டு துறையை மேம்படுத்துவதற்காக அங்கே சென்று தமது பயிற்சிகளை முடித்த பின்னர் வீடு செல்கின்றார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை கல்வி செயற்பாடுகளுக்கு மட்டும் பெற்றோர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பெற்றோர் படி படி என கூறுகின்றார்கள் தவிர இந்த விளையாட்டு துறையை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்களை ஈடுபடுத்த முயற்சிப்பதில்லை.

இனிவரும் காலங்களில் எமது கல்வி அமைச்சானது இவ்வாறான திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து நூறுவீத பங்களிப்பை வழங்குவோம்.

எமது அரசாங்கமானது ஆட்சிக்கு வந்த பின்னர் 6 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியினை கல்வி செயற்பாட்டுக்காக ஒதுக்கி அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது எனவும் இனிவரும் காலத்திலும் எமது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மூலம் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையை முன்னேற்றுவதற்கு இரவுபகலாக பாடுபட்டு முன்னேற்ற நடவடிக்கை எடுப்போம் எனவும் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மூலம் இந்த வடக்கு மாகாணத்தில் போருக்கு முன்னர் இருந்த கல்வி நிலையை மீண்டும் உருவாக்க நாம் முயற்சிப்போம் எனவும் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் இவ்வாறான செயற்பாடுகளை ஈடுபடுத்துவதன் மூலம் சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் எமது மாணவர்களை விளையாட்டு துறையில் உருவாக்க முடியும் எனவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர்கள் மற்றும் யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் மற்றும் வடமாகாண கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் மற்றும் கல்வியாளர்கள் மற்றும் கிரிக்கெட் ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (இ-101)

## நிர்வாகத்தால் அநீதி! மாணவர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்லூரி மாணவர்களுக்கு நிர்வாகத்தால் அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து மாணவர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கல்லூரி நிர்வாகத்திடம் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி தொடர்பாக முறையிட்ட போதும் தமது கோரிக்கை தொடர்பில் அலட்சியப் போக்கை கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தனர்.

மாணவர்களின் எதிர்காலக் கல்வியைக் கருத்தில் கொண்டு கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனத் தெரிவித்து பதாகைகளைத் தாங்கியவாறு நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-10)

## உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்த கலந்துரையாடல்



(அராலி)

அராலி மேற்கு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய முன்றலில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சிவன் அறக்கட்டளை நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் வாழ்வாதாரம் உதவித் திட்டங்கள் பற்றியும் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (இ-104)

## 44 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் வடக்கு மாகாணத்தில் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சுமார் 44 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப் படவுள்ளதாக நெல் சந்தைப் படுத்தல் சபை தெரிவித் துள்ளது.

இவ்வருடம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு. வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நெல் அறுவடை ஆரம்பித்த நிலையில் கடந்த 5 ஆம் திகதியிலிருந்து அறுவடை செய்யப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்வதாக அச் சபை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் முதற்கட்டமாக நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் கடந்த 9 ஆம் திகதி வரை ஒரு இலட்சத்து 39 ஆயிரத்து 700 கிலோ கொள்வனவு செய்யப்படவுள்ளதாக அச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

## பார்வையாளர் அரங்கு திறப்பும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அல்லைப்பிட்டிறோ.க த.க. வித்தியாலயத்தின் பார்வையாளர் அரங்கு திறப்பு விழாவும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் நாளை 13 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் வி. என். பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட் தந்தை எம். டேவிட், தீவகவலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் ஜெ. ஞானசீலன், கௌரவ விருந்தினராக அல்லைப்பிட்டி கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பினதும்,சென். பிலிப்ஸ் விளையாட்டுக் கழகத் தலைவருமான எஸ். கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## தேசிய விருது வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒருமைப்பாடு. அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து நடத்தும் தேசிய விருது வழங்கும் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்றது. (இ-5)

## சிறுகதை தொகுதி அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

சமரபாகு சீனா உதயகுமாரின் தமிழினி சிறுகதை தொகுதிக்கான அறிமுக விழா எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவல்கள் கி.ரவிக்குமார் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் கலந்து கொள்வார். (இ-5)

## பரவைக்குளப்பகுதி சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை முன்னிட்டு திருநெல்வேலி பரவைக்குளம் பகுதியில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. பரவைக்குளம் பகுதியில் உள்ள காணிகள், வயல்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவை இதன் போது துப்புரவு செய்யப்பட்டன.

இதில் நல்லூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த கொக்குவில் பொது சுகாதார பரிசோதனைகள் ஜே/110 கிராம உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-4-272)



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புவேந்தன் முன்பள்ளி மைதானத்தில் மாதர் சங்க தலைவி தலைமையில் நடைபெற்றது. மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த போட்டிகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- கொடிகாமம் செய்தியாளர்)

## சமூகசேவகி வேதவல்லியின் சிலை திறப்பு





(யாழ்ப்பாணம்)

சமூகசேவகியும் நீர்வேலி ஸ்ரீமுருகன்மாதர்சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகருமாகிய அமரர் திருமதி வேதவல்லி கந்தையாவினுடைய சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் மாலை நீர்வேலி கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைந்துள்ள வேதவல்லி கந்தையா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்றது.

மாதர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத் தலைவி ஆ.ருக்மணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்பொ.வாகீசன் கலந்து கொண்டு அமரர் வேதவல்லி கந்தையாவினுடைய திருவுருவ சிலையை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து அமரர் வேதவல்லியினுடைய மகன் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க மாதர்களால் அமரர் வேதவல்லி கந்தையா ஞாபகார்த்தமாக அவருக்கா[illegible] நினைவஞ்சலிக் கீதம் உருவாக்கப்பட்டு இசைக்கப்பட்டது.(இ-89)

# INDIA EDUCATION FAIR- 2019

## WORLD CLASS EDUCATION AT AFFORDABLE COST

## குறைவான கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வி

Facilitating the widest range of career assessment opportunities at the doorsteps, the latest edition of India Education fair 2019 would once again reach out to the students of Sri Lanka on 11 and 12 February, 2019, at The Valampuri Hotel, Jaffna organized by "SAPE Events & Media Pvt. Ltd." supported by the High Commission of India, Colombo, Ministry of Higher Education, Govern ment of Sri Lanka and S.R Global Services Pvt. Ltd Sri Lanka which is bringing a delegation of around 15 Universities from India for conducting an Education Seminar and Fair at The Valam puri Hotel, Jaffna from 10am to 6pm. The focus of the event will be to "invite students to study in India under various scholarships".

Apart from bringing students and best of educational institutions under one roof, the event also helps the aspirants and the guardians have a detailed discussions about the facilities and fee structures of Indian institutions along with expert guidance. It also facilitates an easy comparison to help in making infor med decisions, best suited as per individual needs.

Education is an important area of co operation between India and Sri Lanka. Both countries have a shared legacy of intellectual, cultural, religious and linguistic discourse dating back to more than 2500 years. People to people contacts are at the core of this special relationship.

In recent years, a number of steps have been taken to encourage deeper and meaningful interactions between the two peoples. Educational linkages between India and Sri Lanka occupy a special place in this frame work of interactions.

A large number of Sri Lankan students take admission in Indian universities every year for studies at different levels and in varied courses. The proximity, cultural linkages, and world class Indian education at com paratively low costs have been a major attraction for Sri Lankan students. India also provides a large number of scholarships in various disciplin es to further encourage and support Sri Lankan students in their quest for a better education.

These scholarships are adminis tered through the High Commission of India, in collaboration with Govern ment of Sri Lanka. Last year, India offered more than 700 scholarship slots to deserving Sri Lankan students, at the "A" level, undergraduate, postgraduate and at research levels. In addition, under the Indian Technical and Economic Cooperation Scheme

This "India Educati on Fair, Sri Lanka" will help in apprising Sri Lankan Youth about the opportunities available in India as well as give Indian Universities and Education Institutions an idea about opportunities available in Sri Lanka.

The students can also gain information on edu cation expenses that are a definite requirement to fund today's growing expense in education. The students can also use this platform to avail scholarships and on the spot admissions. For fur ther details contact


**Ruwani Perera at 0094-772270213**

**Email – ruwanip. srglobal services@ gmail.com**

Regards
Sanjoy Thapa
Founder & MD

# ஜனாதிபதியே ஜனநாயக விரோதி!

## ஜே.வி.பி.காட்டம்



(கொழும்பு)

**ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு குறித்து பேசும் ஜனாதிபதியே அரசியல் அமைப்பை மீறிய வகையில் ஜனநாயக விரோத ஆட்சியை கொண்டு நடத்திச் செல்கிறார் என குற்றம்சாட்டிய மக்கள் விடுதலை முன்னணி, அரசியல் அமைப்பை மீறி பாராளுமன்றத்தைக் கலைத்தபோதே அவருக்கு எதிரான குற்றப்பிரேரணையை கொண்டுவந்து அவரைப் பதவி நீக்கியிருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.**

நாட்டின் அரசியல் நகர்வுகள் மற்றும் தேர்தல்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார்.

பிரதான இரண்டு கட்சிகளும் இந்த நாட்டை நாசமாக்கி இலங்கையின் அடையாளத்தை அழிக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுத்துள்ளனர்.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்ததன் நோக்கத்தை பிரதான இரண்டு தலைவர்களும் கைவிட்டு தமது தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக மட்டுமே செயற்பட்டு வருகின்றனர்.

எனவே அரசியல் குழப்பங்களை சரிசெய்ய வேண்டுமென்றால் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதே தீர்வாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தரம் குறைந்த தலைக்கவசங்கள் இறக்குமதிக்குத் தடை-அரசு அறிவிப்பு

தரம்குறைந்த தலைக் கவசங்கள் இறக்குமதி செய்வது தடைசெய்யப்படும் என போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்தமையால் ஏற்கனவே சந்தைகளில் காணப்படும் தரம் குறைந்த தலைக்கவசங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தரம் குறைந்த தலைக்கவசங்கள் இறக்குமதி செய்வது தடை செய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார். இதன் பின்னர் கடந்த 2017 ஆம் ஆண்டு முழுமையாக முகத்தை மறைக்கும் தலைக்கவசங்களுக்கும் அரசாங்கம் தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிய நியமனங்கள் சட்டத்திற்குப் புறம்பானவை மருத்துவ பீட மாணவ,பெற்றோர் சங்கம் சாடல்

(கொழும்பு)

சுகாதார அமைச்சால் வழங்கப்படவுள்ள வைத்திய சேவைக்கான புதிய நியமனங்கள் சட்டத்துக்கு புறம்பானவை என்பதால் வைத்தியசேவைக்கான புதிய நியமனங்களுக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிடுவதாகவும். இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் வலியுறுத்தி மருத்துவ பீட மாணவ. பெற்றோர் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக அச்சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வசந்த அல்விஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

பல்கலைக்கழகங்களில் 5 வருட மருத்துவக் கல்வியைப் பூர்த்தி செய்ததன் பின்னரே அவர்களின் சேவை பயிற்சி நலன் கருதி ஒரு வருடத்துக்கு பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கான தற்காலிக நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

அதன் பின்னரே வைத்திய சங்கத்தினூடாக வைத்தியர் என்ற அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்படும்.

ஆனால் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள தற்காலிக நியமனங்கள் அநேகமாக வெளிநாடுகளில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதுடன். அவர்களில் பெரும்பாலானோர் இரண்டு தடவைகளுக்கு மேல் பரீட்சைகளுக்கு தோற்றி சித்திபெற்றவர்கள் என்றும் அடையாளங் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவின் ஆட்சேபனை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

அருங்காட்சியகம் தொடர்பான வழக்கினை மூவரடங்கிய நீதாய மேல் நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தாக்கல்செய்த மனுவை நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அத்தோடு மெதமுலனையில் டீ.ஏ. ராஜபக்ஷ அருங்காட்சியகத்தை நிர்மாணிப்பதற்கு அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பான விசாரணைகள், தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என நீதாய மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தங்காலை-வீரகெட்டிய-மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ நினைவு அருங்காட்சிய நிர்மாண பணியின் போது 49 மில்லியன் ரூபாய் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளமை உள்ளிட்ட பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் 7 குற்றப்பத்திரங்களை சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ளார்.

இதனை அடுத்து டீ.ஏ. ராஜபக்ஷ அருங்காட்சியக வழக்கை விசாரிக்க, மூவரடங்கிய நீதாய மேல் நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என கோத்தபாய ராஜபக்ஷ மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில். கோத்தபாய ராஜபக்ஷவின் மனுவை நிராகரிப்பதாக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த வழக்கு விசாரணையானது எதிர்வரும் 22 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா:40<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:A/L,தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:அரசதொழில்<br>தொ.இ: B/9273 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 71 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் சுயதொழில்<br>தொ.இ: G/2279 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Bank, Canada<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்,உள்நாடு<br>தொ.இ: B/9276 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா:52<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: MA,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி தொழில்<br>தொ.இ: G/2288 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 18<br>உயரம்:163cm<br>தகைமை/தொழில்:B.Sc,M.Sc, Civil Engineer, Singapore<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி, Engineer, CIMA, Accountant,உள்நாடு<br>தொ.இ: B/9277 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்<br>தொ.இ: G/2292 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா:8<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:B.Sc,முகாமையாளர் அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/9280 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை2<br>கி.பா: 36 செவ் 12 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L, சுய தொழில்<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்/சொந்த தொழில்<br>தொ.இ: G/2307 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இரத்த அழுத்தமும்... கல்சியமும்...

உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப் படுத்துவதில் கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம் ஆகிய மூன்று ஊட்டச்சத்துக்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

இதயம் சார்ந்த நோய் பாதிப்புகள் மற்றும் சிறுநீரக பிரச்சினைகள் ஏற்படுவதற்கு உயர் இரத்த அழுத்தம் முக்கிய காரணமாக இருக்கிறது.

மற்ற நோய்களை போல இதன் பாதிப்புக்கான அறிகுறிகளை எளிதில் கண்டறிய முடியாது. உடற் பயிற்சியும், ஆரோக்கியமான உணவு பழக்கவழக்கமுமே உயர் இரத்த அழுத்த பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.

உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப் படுத்துவதில் கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம் ஆகிய மூன்று ஊட்டச்சத்துக்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

பொட்டாசியம் தசைகளின் முறையான செயற்பாட்டுக்கு வழி வகை செய்கிறது. ஒழுங்கற்ற இதய துடிப்பை சமநிலைப்படுத்தி இதயத்திற்கு சமிக்ஞைகளை கடத்தவும் உதவுகிறது.


இரத்த அழுத்த பாதிப்புக்கு ஆளாகி இருப்பவர்கள் பொட்டாசியம் அதிகம் நிறைந்த ஒரேஞ்சு, காளான்கள், கீரை வகைகள், பிராக்கோலி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, முந்திரி, வாழைப்பழங்கள் போன்றவற்றை சாப்பிட்டு வர வேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதிலும், தசைகள் மற்றும் நரம்புகளின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதிலும் மக்னீசியத்திற்கு முக்கிய பங்கு இருக்கிறது. எலும்புகளின் வளர்ச்சிக்கும்மெக்னீசியம் தேவையானதாக இருக்கிறது. வாழைப்பழங்கள், வெண்ணெய், கொட்டை வகைகள், விதைகள், கறுப்பு பீன்ஸ், கீரை வகைகள் போன்றவற்றில் மக்னீசியம் அதிகம் கலந்திருக்கிறது.



கல்சிய குறைபாடும் உயர் இரத்த அழுத்த பாதிப்பை அதிகரிக்கும். உடலில் ஓமோன்களின் சீரான செயற்பாட்டுக்கு கல்சியத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. இரத்த குழாய்களின் சீரான இயக்கத்திற்கும் கல்சியம் அவசியம். பால், தயிர், பாலாடை கட்டிகள், பயறு வகைகள், மீன் வகைகள், பச்சை இலை காய்கறிகள் போன்றவற்றில் கல்சியம் உள்ளது.

# விக்கல் வருவதற்கான முக்கிய காரணங்கள்



வேக வேகமாக உணவைச் சாப்பிடுவது, மிகச் சூடாக சாப்பிடுவது, தேவையான அளவுக்கு தண்ணீர் அருந்தாதது போன்றவை விக்கலுக்கு முக்கிய காரணங்கள்.

சாதாரணமாக நாம் சுவாசிக்கும்போது காற்றை உள் இழுக்கிறோம். அப்போது மார்பு தசைகள் விரிகின்றன. மார்புக்கும், வயிற்றுக்கும் இடையில் நுரையீரலை ஒட்டியுள்ள உதரவிதானமும் அப்போது விரிகிறது. உடனே, தொண்டையில் உள்ள குரல்நாண்கள் திறக்கின்றன. அப்போது நுரையீரலுக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதேநேரம் நுரையீரலுக்குள் காற்று செல்ல அதிக இடம் கிடைக்கிறது.

இதனால் நாம் சுவாசிக்கும் காற்று, திறந்த குரல்நாண்கள் வழியாக தங்கு தடையின்றி நுரையீரல்களுக்குள் நுழைந்து விடுகிறது. இதுதான் இயல்பாக நிகழும் சுவாச நிகழ்வு. சில நேரங்களில், மார்பு பகுதியில் உள்ள நரம்புகள் உதரவிதானத்தை எரிச்சல்படுத்தினால், அது மூளைக் கட்டுப்பாட்டை மீறி, தன்னிச்சையாக திடீர் திடீரென்று சுருங்க ஆரம்பித்து விடும். அப்போது குரல்நாண்கள் சரியாக திறப்பதில்லை.

அந்த மாதிரி நேரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று குரல் நாண்களின் குறுகிய இடைவெளி வழியாகத்தான் நுரையீரலுக்குள் சென்று திரும்ப வேண்டும்.

அப்போது அந்த காற்று, புல்லாங்குழலில் காற்று தடைப்படும் போது இசையொலி உண்டாவதைப் போல, தொண்டையில் 'விக்... விக்...' என்று ஒரு விநோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் 'விக்கல்'.

வேக வேகமாக உணவைச் சாப்பிடுவது, மிகச் சூடாக சாப்பிடுவது, தேவையான அளவுக்கு தண்ணீர் அருந்தாதது போன்றவை விக்கலுக்கு முக்கிய காரணங்கள். வலி நிவாரணி மாத்திரைகள், ஸ்டீராய்டு மாத்திரைகளை சாப்பிட்டாலும் விக்கல் வரும். இரண்டு நாட்களுக்கு மேல் விக்கல் தொடர்ந்தால், அது நோய்க்கான அறிகுறி என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உதாரணத்துக்கு, இரைப்பையில் அல்சர் இருக்கும்போது, சிறுநீரகம் பழுதாகி இரத்தத்தில் யூரியா அளவு அதிகரிக்கும்போது விக்கல் வரும். உதரவிதானத்தில் நோய் தொற்று, கல்லீரல் கோளாறு, நுரையீரல் நோய் தொற்று, குடல் அடைப்பு, மூளைக் காய்ச்சல், கணைய அழற்சி, பெரினிக் நரம்பு வாதம் போன்றவற்றாலும் விக்கல் வரும். மூச்சை நன்றாக உள்ளிழுத்து அடக்கிக்கொள்ளுங்கள். 20 எண்ணும் வரை மூச்சை வெளியில்விட வேண்டாம்.

பிறகுதான் மூச்சை வெளியில் விட வேண்டும். இப்படி 5 முறை செய்தால் விக்கல் நின்றுவிடும். வேகமாக ஒரு செம்பு குளிர்ந்த தண்ணீர் குடித்தால், விக்கல் நின்றுவிடும். ஒரு தேக்கரண்டி சர்க்கரையை நாக்கில் வைத்து அதை தானாக கரையவிட்டால், விக்கல் நிற்கும்.

ஏதேனும் ஒரு வகையில் தும்மலை உண்டாக்கினால், விக்கல் நிற்கும். சில நிமிடங்கள் நீடிக்கும் விக்கலுக்கே நாம் பயந்து போகிறோம். அமெரிக்காவில் சார்லஸ் ஆஸ்பார்ன் என்பவர் 68 ஆண்டுகளுக்கு தொடர்ந்து விக்கல் எடுத்துக் கின்னஸ் ரிக்கார்டு செய்திருக்கிறார்.

# சுற்றுலா விடுதியில் ஏற்பட்ட நச்சுப்புகையில் ஒருவர் பலி! இருவர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

சுற்றுலா விடுதியொன்றில் ஏற்பட்ட திடீர் நச்சுப் புகையால் ஒருவர் பலியானதுடன் இரண்டு பெண்கள் ஆபத்தான நிலையில் தியத்தலாவை அரசினர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சம்பவம் அப்புத்தளைப் பகுதியிலுள்ள இதல்கஸ்ஹின்ன சுற்றுலா விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. விடுதி உரிமையாளரான லோ. பாலசந்திரன் என்ற 60 வயது நபரே குறித்த நச்சுப் புகையால் உயிரிழந்துள்ளார்.

குறித்த விடுதியில் குளிர் கடுமையானதால் அறைக்குள் பொருத்தப்பட்டிருந்த அடுப்பைப் பற்ற வைத்து வெப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு நித்திரைக்குச் சென்றுள்ளனர். அவ்வேளையில் திடீரென்று அடுப்பிலிருந்து கடும் நச்சுப் புகை ஏற்பட்டு அறை முழுவதும் புகை மண்டலமாகியது. இதனால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மூவரும் தங்கமலை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு மூவருக்கும் சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில், ஏனைய இருவரும் ஆபத்தான நிலையிலிருந்ததால் தியத்தலாவை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் குறித்த இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நச்சுப்புகையால் இறந்தவரின் சடலம் தங்கமலை அரசினர் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த விடுதியில் ஏற்பட்ட நச்சுப்புகை குறித்து தீவிர பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

# அம்புலன்ஸ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுகாதார அமைச்சால் புதிதாக வழங்கப்பட்ட நோயாளர் காவு வண்டிகளை (அம்புலன்ஸ்) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நாளை 13 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தவிர்க்க முடியாத காரணத்தால் குறித்த நிகழ்வானது அதே தினம் வட மாகாண முதலமைச்சர் செயலகம் செயலாளர் அலுவலகத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)





யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைப்பீட மாணவர்களின் ஏற்பாட்டில் அழகெழல் நிகழ்வு தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்:-சக்தி)

# இனவாதிகளின் கருத்திற்கு ஏற்றவாறு அரசியலமைப்பை உருவாக்க முடியாது



## அமைச்சர் ரவி திட்டவட்டம்

(கொழும்பு)

**இனவாதிகளின் கருத்திற்கு ஏற்றவாறு அரசியலமைப்பை உருவாக்க முடியாது என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் ரவி கருணாநாயக்க மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலியை நேற்று திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய அரசியலமைப்பு, ஒரு இனத்திற்காகவோ, ஒரு மதத்திற்காகவோ தயாரிக்கப்படமாட்டாது.

தற்போது நாட்டுக்கு புதிய அரசியலமைப்பொன்று அவசியமான ஒன்றாக இருக்கிறது. இதனை நாம் பலவந்தமாகக் கொண்டுவர முடியாது.

அனைத்து மக்களின் ஒத்துழைப்புடன், அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலேயே அது அமையப்பெற வேண்டும்.

எவ்வாறாயினும் ஒற்றையாட்சி, பௌத்தத்திற்கு முன்னுரிமையுடன் தான் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

இனவாதிகள் தான் இது தொடர்பில் பொய்யான கருத்துக்களை கூறிவருகிறார்கள். இவ்வாறான ஒரு அரசியலமைப்பு ஒரு இனத்துக்கோ, மதத்துக்கோ அல்லது கட்சிக்கோ மட்டும் மட்டுப்பட்டதாக இருக்காது.

இலங்கையர் எனும் அடிப்படையில்தான் இந்த அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். இந்தப் பிரச்சினையை நாம் வெகு விரைவில் தீர்ப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதன்முறையாக வெளிநாட்டில் இலங்கைப் பல்கலை.கிளைகள்

## அமைச்சர் ஹக்கீம் பெருமை



(கண்டி)

பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் கிளைகளை மாலைதீவில் அமைப்பதற்கு அந்நாட்டு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். வரலாற்றில் முதல் முறையாக இலங்கை பல்கலைக்கழகங்களின் கிளைகள் வெளிநாட்டில் அமைக்கப்படுவதால், எமது கல்வித்தரம் சர்வதேச தரப்படுத்தலுக்கு மேம்படும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி, யஹலதென்ன முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாலைதீவு ஜனாதிபதி அண்மையில் இலங்கை வந்திருந்தபோது, ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் நடைபெற்ற சந்திப்பில் நான் முன்வைத்த கோரிக்கையொன்றை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களின் கிளைகளை மாலைதீவில் அமைக்கும் எனது யோசனைக்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்துக்கு மாலைதீவில் தனியொரு தீவை ஒதுக்கித்தருவதாக அவர் வாக்குறுதியளித்துள்ளார். அங்குள்ள மாணவர்கள் தங்களது பல்கலைக்கழக கல்வியின் முதல் இரண்டு வருடங்களை மாலைதீவு கிளையிலும், இறுதி இரண்டு ஆண்டுகளை இங்குள்ள பல்கலைக்கழகங்களிலும் கற்பார்கள். இதன்மூலம் எமது கல்வித்தரம் சர்வதேச அளவிலான தரப்படுத்தலுக்கு மேம்படுத்தப்படும்.

உயர்கல்வி அமைச்சை பொறுப்பேற்றுள்ள நிலையில் அதில் பல மாற்றங்களை செய்வதற்கு தீர்மானித்துள்ளேன். இனிவரும் காலங்களில் தொழில்நுட்ப கல்விக்கு அதிக முக்கியத்துவமளித்து புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதற்காக பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப வளாகங்களை உருவாக்கி வருகிறோம்.

உயர்தரத்தில் கற்கை நெறிகளை தெரிவுசெய்தல் குறித்து மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் போதிய தெளிவின்மை யால், பல்கலைக்கழகம் சென்று தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தொழில்வாய்ப்பை அடிப்படையாக வைத்தே பாடநெறிகளை தெரிவுசெய்ய வேண்டும்.

இனிவரும் காலங்களில், சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சை முடிவடைந்த பின்னர், அந்தந்த வலயக் கல்வி நிலையங்கள் ஊடாக மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டி பயிற்சிகளை வழங்குமாறு மகாபொல நிதியத்துக்கு பணிப்புரை விடுக்கவுள்ளேன். இதன்மூலம், மாணவர்கள் சரியான பாடநெறிகளை தெரிவுசெய்வதை இலகுபடுத்த முடியும்.

தொழில்வாய்ப்புக்கு பொருந்தாத பாடங்களை பல்கலைக்கழகங்களில் குறைப்பதற்கு தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம். கலைப்பிரிவில் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தாது அதனை மட்டுப்படுத்தவுள்ளோம். தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு இலகுவான பாடநெறிகளையே புதிதாக அறிமுகப்படுத்தவுள்ளோம்.

இலங்கை பல்கலைக்கழகங்களில் கல்வித் தரத்தை சர்வதேச தரத்துக்கு மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

முன்னணி பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்துக்கு மேம்படுத்த புதியதொரு சட்டமூலத்தை உருவாக்க வுள்ளேன். இதற்கென பிரத்தியேகமாக ஒரு ஆணைக்குழுவை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளேன். இதற்கான முன்மொழிவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# செயற்பட்டு மகிழ்வோம் விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல்ஒருமணியளவில்பாடசாலை மைதானத்தில் அதிபர் ம.முகுந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜய கலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அரச ஊழியர் சி.ஜெயபாலன் (ஜே.பி), சுகாதாரப் பரிசோதகர் கெ.லதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# குறை'களை' பதிகம் 16



## அரச ஊழியர் எமக்கு வீட்டுத்திட்டம் இல்லையோ?

வரமது அருளும் எங்கள் சிவனே
எங்களின் குறைதனைக் கேளாய்
சிரமதில் வேதனை தினமும் சுமந்தோம்
சிரத்தையோ டெங்களைப் பாராய்
பரமனே பாவியர் நாங்களும்
இந்த நாட்டினின் மக்களே அதனால்
அரச ஊழியர் நீர் உங்களுக்கெதுவும்
இல்லை என்றுரைப்பது தகுமோ

கூடியே வாழ்ந்தோம் குஞ்சொடுகுருவி
போலவே வன்னியில் இருந்தோம்
தேடியே ஷெல்கள் அரச ஊழியர் என
பிரித்து விழாமல் எங்களின் மேல் விழ
வீடினை இழந்தோம் காலினை இழந்தோம்
விரும்பிய வாழ்வது தொலைத்தோம்
வாடியே இன்று வாடகை வீட்டில்
வாழ்கின்ற எங்களைப் பார்ப்பாய்

மார்கழி மாதம் மக்களுக்கு வழங்கும்
மரக்கன்றும் உமக்கில்லை என்பார்
பார் தன்னை ஆளும் பரமனே நாங்கள்
படும் துயர் தீர்த்திட வருவாய்
பேரினில் மட்டும் அரச ஊழியர் என
பெருமையாய் பேசிடும் எமக்கு
சீர் வீடுபேறைத் தந்திடு பின்னர்
வீடொன்றை வழங்கிடு முன்னர்

வேத நாயகனே எங்களின் முதல்வா
வெந்துயர் தீர்த்திடும் தலைவா
பாதகமான போரிலே நாங்கள்
பட்டதுயர் நீ அறிவாய்
வீட்டினை வழங்கும் புள்ளித்திட்டத்தில்
எங்களின் பெயர்களைச் சேர்த்து
சாதகமாகவே எமக்கருள் புரிந்து
அடியார் மனதில் அமர்வீரே

சிவனடியான்

# தொழிற்சங்கப் போராட்டத்தால் ஏற்பட்ட நட்டத்துக்கு மங்களவே பொறுப்பு-வாசு



(கொழும்பு)

சுங்க திணைக்கள ஊழியர்கள் மேற்கொண்டிருந்த போராட்டத்தால் திணைக்களத்துக்கு ஏற்பட்ட நட்டத்தை அமைச்சர் மங்கள சமரவீரவே பொறுப்பேற்க வேண்டும்.

அவரின் தன்னிச்சையான நடவடிக்கையே இதற்கு காரணமாகும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# முல்லை. கடற்கரையோரங்களில் கொட்டப்படும் கழிவுகளால் பாதிப்பு

## சிறு கடற்றொழிலாளர்கள் விசனம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு நகரை அண்மித்த சிறுகடல் பகுதிகளில் பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என சிறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் கரையோரப்பகுதிகளிலும் நகரை அண்மித்துக் காணப்படும் சிறுகடற் பகுதிகளிலும் கடற் பகுதிகளை மாசுபடுத்தக் கூடிய பிளாஸ்ரிக் கழிவுகள், கண்ணாடிக் கழிவுகள்,மது பான வகைகளின் வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன்கள் வியர் ரின்கள்,வீட்டுப் பாவனைக்கழிவுகள் என்பவற்றை சிலர் கொட்டி வருகின்றனர்.

இவ்வாறான கழிவுகள் கொட்டப்படுவதனால் இயற்கையாகவே மீன் உற்பத்தியாகும் இக்கடற்பகுதிகள் மாசடையும் அபாயநிலை காணப்படுகின்றது.

குறித்த கடற்பகுதிகளை பாதுகாக்கக்கூடிய வகையில் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் என்றும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து சிறு கடற் கரையோரப் பகுதிகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## சட்டவிரோதமாக மரக்காலை நடத்தியவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் கொலனிப் பகுதியில் அனுமதியற்ற முறையில் மரம் அறுக்கும் இயந்திரம் வைத்து மரங்களை அறுத்து தளபாடங்கள் செய்து விற்பனை செய்துவந்த நபரை கடந்த சனிக்கிழமை கைது செய்த புதுக்குடியிருப்பு பொலிசார், மரக்காலையில் இருந்த இயந்திரங்கள் மற்றும் மரத் தளபாடங்களையும் கைப் பற்றியுள்ளனர்.

சுதந்திரபுரம் காட்டுப்பகுதியில் அனுமதி இன்றி மரங்கள் அறுக்கப்பட்டு அவற்றை அனுமதி அற்ற மரம் அறுக்கும் இயந்திரம் கொண்டு ஜன்னல்கள். கதவு நிலைகள் என்பனவற்றை தயாரித்து குறித்த நபர் விற்பனை செய்து வந்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் அவரை கைது செய்ததுடன் அவரிடம் இருந்த ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கதவு நிலைகள், ஜன்னல்கள் என்பனவற்றுடன் மரம் அறுக்கும் இயந்திரத்தையும் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (9-281)

## உடையார்கட்டு காட்டில் சட்டவிரோத மணல் அகழ்வு; சிறப்பு அதிரடிப் படையினரால் நான்கு பேர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியிலுள்ள நஞ்சுண்டான் ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 பேரை கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினர் கடந்த சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

நஞ்சுண்டான் ஆற்றுப் பகுதியில் அரச காட்டுக்குள் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபடுவதாக கிளிநொச்சி மாவட்ட சிறப்பு அதிரடிப்படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் கடந்த சனிக்கிழமை அப்பகுதிக்குச் சென்ற அதிரடிப்படையினர் மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 4 பேரை கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

மேலும் அவர்கள் மணல் அகழ்வுக்குப் பயன்படுத்திய 4 உழவு இயந்திரங்களையும் கைப்பற்றிய அதிரடிப்படையினர் அவற்றை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் (9-28)

## வவு.விஞ்ஞானன் குளம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு-டக்ளஸ்

வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட விஞ்ஞானன் குளம் பகுதி மக்கள் எதிர்கொண்டுவரும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுத்தரப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த அவர் வவுனியா வடக்கு விஞ்ஞானன் குளம் பகுதியில் அடிப்படை வசதிகள் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்துவரும் 190 குடும்பங்களது பிரச்சினைகள் தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது குறித்த பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

எமது பகுதி மக்கள் பல்வேறு புறக்கணிப்புகள் காரணமாக பல அபிவிருத்திகளை இழந்துள்ளனர். ஆனால் எமது பிரதேசத்தில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகள் முதற் கொண்டு குறிப்பாக வீடமைப்பு, வீதி புனரமைப்பு, மின்சாரம், மலசலகூடம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாது காணப்படுகின்றன.

ஆனாலும் இதுவரை அதற்கான தீர்வுகளைப் பெற்றுத்தர இங்குள்ள அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட எவரும் முன்வரவில்லை எனத்தெரிவித்தனர்.

மக்களது கோரிக்கைகளை கருத்திற் கொண்டு அவர் பதிலளிக்கையில், எதுவித பாரபட்சங்களோ முறைகேடுகளோ இடம் பெறாத வகையில் மக்களுக்கான சேவையைச் செய்ய நாம் என்றும் தயாராகவே இருக்கின்றோம்.

அந்தவகையில் உங்களது பிரச்சினைகள் அனைத்தும் கவனத்திற் கொள்ளப்பட்டு துறைசார் அமைப்பினருடன் கலந்துரையாடி விரைவாகத் தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த அவர், எதிர்வரும் காலத்தில் எமது கரங்களுக்கு அரசியல் பலத்தை மக்கள் வழங்குவார்களாயின் எமது மக்கள் தற்போது வாழ்ந்துவரும் அவல நிலையிலிருந்து அவர்களை மீட்டு அவர்களது வாழ்வியலை அபிவிருத்தியால் கட்டி எழுப்புவதுடன் எமது இனத்தின் அரசியல் அபிலாஷைகளையும் வெற்றிகண்டுதர எம்மால் முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

## கிளி/மத்திய பேருந்து நிலையத்தில் சுகாதாரச் சீர்கேடு அதிகரிப்பு கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை



கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அங்கு சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாக குற்றம் சாட்டியுள்ள பொதுமக்கள் குறித்த விடயம் தொடர்பில் சம்பத்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்யுமாறும் கோரி க்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு அரைகுறையாக கடந்த சில வருடங்களாக காணப்படுகிறது. இதனால் அரைகுறையாக உள்ள பேருந்து நிலையம் தற்போது மது பானப் பாவனையாளர்களாலும் மலசலம் கழிப்பதற்கும் பயன்பட்டு வருகிறது.

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு திணைக்களங்களின் கட்டடங்கள் அமைக்கப்பட்டு உட்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பேருந்து நிலையம் மாத் திரம் அரைகுறையாக இருப்பது தொடர்பில் எவரும் கவனம் செலுத்தவில்லை. இதனை மேற்கொண்டு அபி விருத்தி செய்து கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிரந்தர பேருந்து நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இதுவரை அதிகாரிகள், அரசியல் தரப்புக்கள் எவரும் அக் கறை செலுத்தவில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதேவேளை தற்போது பொதுமக்கள் வெயில், மழை காலங்களில் மிகுந்த



சிரமங்களை எதிர்கொண்டு தங்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (9-315)








மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் "வள்ளுவம் கண்ட தமிழ்த் தேசியம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள குடும்பப்பணி நிலையமண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

எழுத்தாளர் எஸ்.ஏ. உதயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த அருட்திரு.வெனி இளங்குமரன் அடிகளார் சிறப்புச்சொற்பொழிவை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், மன்னார் அரசாங்க அதிபர் மோகன்றாஸ், மன்னார் தமிழ்ச் சங்க நிதிச் செயலாளர் ஜனாப் கலீல் முஹம்மது நஜீம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-285)







கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெ[illegible]ல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை அதிபர் உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சி.சுப்பையா , எஸ்.ஜே. 87 நிறுவன கிளிநொச்சி கிளை இணைப்பாளர் டேகலா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர் )

# கிராமங்களை பலப்படுத்தும் கிராம சக்தி உரிமை சபைகள்

## விரைவில் அமைக்க ஆளுநர் யோசனை





(மன்னார் )

வட மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களின் தனித்துவங்களை இனங்கண்டு அக் கிராமங்களை பலப்படுத்தும் நோக்கில் கிராம சக்தி உரிமை சபைகளை ஸ்தாபிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் யோசனை வழங்கியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தை சோந்த அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் வட மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் முற்பகல் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே மேற்குறித்த யோசனையை ஆளுநர் முன்வைத்துள்ளார்.

கிராமங்களில் மக்கள் அதிகளவான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதுடன் அவற்றை தீர்ப்பதில் அரச நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் அரசுக்கு நேரடியாக பணிபுரியும் கிராம சேவையாளர்களுக்கு பாரிய பொறுப்புக்கள் இருக்கிறது என்பதையும் ஆளுநர் சுட்டிக் காட்டியதுடன் கிராம சக்தி உரிமை சபைகளை அமைப்பதன் ஊடாக மக்களின் பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர்வுகளை வழங்க முடியும் என்பதையும் ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

அந்த வகையில் ஒவ்வொரு கிராமத்தை சேர்ந்த கிராம சேவகர் மற்றும் 10 பேரை இணைத்து (அதில் 4 பேர் கட்டாயம் பெண்களாக இருக்கவேண்டும்) ஒரு குழுவை ஸ்தாபித்து அந்த குழு கிராம சக்தி உரிமை சபையாக உருவாக்கப்படும்.

வட மாகாணத்தில் மொத்தமாக 989 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் உள்ளதுடன் முதன் முறையாக மன்னார் மாவட்டத்தில் இருந்து இதனை ஆரம்பித்து வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் விஸ்தீரணப்படுத்தப்படுவது இதன் நோக்கம்.

இன்னும் இரு வாரங்களில் இந்த குழு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மாவட்டச் செயலாளரின் கீழ் கிராம உத்தியோகத்தர்களின் பொறுப்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த குழுவில் அரசியல் பிரதிநிதிகளையும் இணைக்க வேண்டும் என்ற ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. இதே போன்ற ஆலோசனைகள் இருப்பின் தெரியப்படுத்த முடியும் என ஆளுநர் தெரிவித்துள்ளார். (9)



# இராணுவத்தில் பணியாற்றும் வறுமைக்கோட்டுக்குட்பட்டவர்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை!



(குருமன்காடு)

இராணுவத்தில் பணியாற்றும் வருமானம் குறைந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் வழங்கும் நடவடிக்கை வன்னி படைத் தலைமையகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வன்னி பிரதேசத்தில் இராணுவத்தில் பணியாற்றும் வீடு இல்லாதவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் நன்கொடையாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக வவுனியா பம்பைமடு மற்றும் வெலிஓயா பிரதேசத்தில் இரண்டு வீடுகளை அமைத்து பயனாளிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா தலைமையில் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டு வீட்டின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் 61வது மற்றும் 62வது படைப்பிரிவுகளில் பணியாற்றும் நாகராசா மூர்த்தி என்பவருக்கு வவுனியா பம்பைமடுவிலும், தனுஷ்கா பிரதீப் குமார என்பவருக்கு வெலிஓயா பிரதேசத்திலும் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இராணுவத்தில் பணியாற்றும் ஐந்து குடும்பங்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் 61 வது படைப்பிரிவின் பிரிகேடியர் கே.டி.சி.ஜி. திலகரத்ன, வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கேணல் அனில் பீரிஸ் மற்றும் இராணுவத்தினர், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# சுமந்திரனின் கருத்துக்கு கேப்பாபிலவு மக்கள் கண்டனம்

(பனிக்கன்குளம்).

நிராகரிக்கப்பட்ட கட்சிகளின் அழுத்தங்கள் காரணமாகவே இலங்கை சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக பாதிக்கப்பட்ட மக்கள் கொண்டாடியதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்கு கேப்பாபிலவில் நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

யாரும் தமக்கு அறிவுரை கூற வேண்டிய அவசியமில்லை எனத் தெரிவித்த கேப்பாபிலவு மக்கள், தமது பூர்வீக நிலங்களை மீட்கவே தாம் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வலியை உணராத காரணத்தினாலேயே தம்மை வைத்து சம்பந்தன், சுமந்திரன். போன்றவர்கள் அரசியல் செய்வதாகவும் அவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். (9-281)

# வவுனியாவில் புதிய கட்சி உதயம்





(குருமன்காடு)

வவுனியாவில் அகதேசிய முற்போக்கு கழகம் எனும் புதிய கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா பண்டாரிக்குளத்தில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியமாக இயங்கிவந்த நிலையிலேயே இக்கட்சி அகதேசிய முற்போக்கு கழகம் எனும் கட்சியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் போது முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும், வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் தலைவரும், கட்சியின் தற்போதைய தலைவருமான எம்.பி.நடராஜாவினால் கட்சியின் கொள்கைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் ஒன்றியமானது மீன் சின்னத்தில் போட்டியிட்டு இரு உறுப்பினர்களை பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(9-250)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தினுடைய பூநகரி பிரதேச கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மகா நாட்டு மண்டபத்தில் பூநகரிக் கிளைத்தலைவர் தி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச அரச சேவை ஓய்வூதியர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தலைவர் கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (9-84)

# மன்னார் மனித எலும்புக்கூடுகளின் பகுப்பாய்வு அறிக்கை 14 ஆம் திகதிக்கு பின்னரே வெளிவரும்-சட்டத்தரணி நிறைஞ்சன்

(மன்னார்)

மன்னார் மனிதப்புதை குழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவிற்கு அனுப்பி காபன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில்.குறித்த மாதிரிகளின் பரிசோதனை அறிக்கை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு பின்னரே வெளிவரும் என சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு அமெரிக்காவிற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு மாதிரிகளின் ஆய்வு அறிக்கை தொடர்பாக அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு 6 பொதிகளில் கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு மறுநாள் 24 ஆம் திகதி விமானம் மூலம் அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு 25 ஆம் திகதி புளோரிடாவில் உள்ள கூடத்திற்கு காபன் பரிசோதனைக்காக கையளிக்கப்பட்டது.

குறித்த மாதிரிகள் ஆய்வு கூடத்தில் கையளிக்கப்பட்ட போது ஆய்வு அறிக்கை 14 கடமை நாட்களின் பின்னரே கிடைக்கும் என தெரிவித்திருந்தார்கள்.

அவர்கள் வழங்கிய கால அவகாசத்திற்கு அமைய எதிர்வரும் 14 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னரே ஆய்வு அறிக்கை கிடைக்கும்.

குறித்த அறிக்கை 14 ஆம் திகதிக்கு பின்னர் மன்னார் நீதிமன்றத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதோடு, அதன் பிரதிகள் எங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்திருந்தனர்.

தபால் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தால் 14 ஆம் திகதிக்கு பின் ஒரு சில தினங்களில் அறிக்கை கிடைக்கும்.குறித்த அறிக்கையினை தனக்கு அனுப்பி வைக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ கோரியிருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக சென்ற சட்டத்தரணிகளான நாங்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தோம்.

அறிக்கை நீதிமன்றத்திற்கே அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கோரியிருந்தோம்.

அதற்கு அமைவாக மன்னார் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அதன் பிரதிகள் எமக்கும் அனுப்பி வைக்கப்படும்.

குறித்த ஆய்வு அறிக்கையின் பின்னரே குறித்த மன்னார் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு வரும் மனித எலும்புக் கூடுகள் தொடர்பான உண்மை விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக வாதிடும் சட்டத்தரணி வி.ஸ்.நிறைஞ்சன் மேலும் தெரிவித்தார். (9-285)




# ஏழு தமிழர்களின் விடுதலையை தமிழகமே பெற்றுத்தர வேண்டும்

## பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் வலியுறுத்து





()

ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகள் ஏழு தமிழர்களின் விடுதலையை தமிழக அரசே பெற்றுத்தர வேண்டும் என்றும், பா.ஜ.கவை அணுகவேண்டிய அவசியம் கிடையாது என்றும் பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

திருவாவூர் மாவட்டம் மன்னார்குடியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலார்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர்,

"ஏழு பேரின் விடுதலைக்காக தமிழக அரசே நடவடிக்கை எடுக்கவேண்டும். நான் பா.ஜ.கவை அணுக வேண்டிய அவசியம் கிடையாது.

ஏனென்றால் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. நீதிமன்றத் தீர்ப்பை ஏன் ஆளுநர் மதிக்கவில்லை என்பதால்தான் இந்த மக்கள் சந்திப்பு கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

உங்கள் மகனை உங்களிடம் ஒப்படைப்பேன் என்று மறைந்த முதல்வர் ஜெயலலிதா வாக்குறுதி அளித்திருந்தார். இது அனைவருக்கும் தெரியும்.

அதை புரிந்தவர்கள், இப்பொழுது அரசியலில் இருக்கிறார்கள். ஜெயலலிதாவின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்" என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றுவரும் முருகன் உள்ளிட்ட ஏழு தமிழர்களின் விடுதலையை வலியுறுத்தி பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் ஒவ்வொரு மாவட்டமாக ஊர்வலமாகச் சென்று கலந்துரையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# பென்டா இருப்பிடத்திற்குள் வீழ்ந்த சிறுமி உயிருடன் மீட்பு




(பீஜிங்)

மிருகக்காட்சிசாலைக்கோ, விலங்குகள் காப்பகத்திற்கோ சென்றால் நமது பாதுகாப்பை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

தென்மேற்கு சீனாவில் சிறுமியொருவர் பென்டா கரடிகளின் இருப்பிடத்திற்குள் வீழ்ந்த நிலையில் பாதுகாப்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

பென்டா கரடிகள் அவ்வளவாக ஆபத்தான விலங்காக இல்லாவிடினும் அவை குறும்புத்தனம் மிக்கவையாக இருக்கின்றன.

எனவே, தங்களின் இருப்பிடத்திற்கு அறிமுகம் இல்லாத ஒருவர் வரும் பட்சத்தில் தாக்கக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டது.

இருந்தபோதும், குறித்த பென்டா கரடி காப்பகத்தின் பாதுகாவலர் ஒருவர் தடியொன்றைக் கொண்டு சிறுமியை மேலே தூக்குவதற்கு முயற்சிக்கிறார். முடியாத பட்சத்தில் தானே தரையில் அமர்ந்து சிறுமியின் கைகளைப் பற்றி மேலே இழுக்கும் காட்சி அங்கிருந்த சி.சி.ரி.வி.கருவியில் பதிவாகியுள்ளது.

எனினும், அங்கு கூடும் 3 பென்டாக்களும் தங்களுக்குள் விளையாடிக் கொண்டிருந்த போதும், சிறுமியை தாக்காமல் இருந்தது தெய்வாதீனமான சம்பவம் என்றே அங்கிருந்த மக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

குறித்த சிறுமி காயங்கள் இன்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டார். எனினும் இந்த சம்பவம் தொடர்பாக காப்பக அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(4-7)

# ட்ரம்ப்-கிம் சந்திப்பு உலக சமாதானத்தில் தாக்கம் செலுத்தும்

## வியட்நாம் மக்கள் எதிர்ப்பு



(யங்கூன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன்னிற்கும் இடையிலான சந்திப்பு உலக சமாதானத்தில் பாரிய தாக்கம் செலுத்தும் என வியட்நாம் மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

ட்ரம்ப்-கிம் சந்திப்பு தலைநகர் ஹனோயில் நடத்தப்படவுள்ளமையை வியட்நாம் மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். இந்நிலையில், அது தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே மக்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இச்சந்திப்பு குறித்து வியட்நாம் பிரஜையொருவர் கூறுகையில், "ட்ரம்ப் மற்றும் கிம் தற்போது உலகின் முக்கிய இரு நபர்களாக மாறியுள்ளனர். அவர்கள் உலக சமாதானத்தில் நிச்சயம் தாக்கம் செலுத்தக்கூடும். அவர்கள் இருவரையும் கண்டு நான் வியக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையில் வியட்நாமில் நடைபெறவுள்ள சந்திப்பு வெற்றிகரமாக அமையும். இப்பேச்சுவார்த்தை அமெரிக்காவிற்கும், வடகொரியாவிற்கும் இடையிலான சமாதானத்திற்கு அத்திபாரமாக அமையும் என எதிர்பார்ப்பதாக மற்றுமொருவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கும், வடகொரிய ஜனாதிபதிக்கும் இடையிலான வரலாற்று முக்கியம் வாய்ந்த இரண்டாவது சந்திப்பு எதிர்வரும் 27 மற்றும் 28 ஆகிய தினங்களில் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# 23 வாகனங்கள் (

# 13 பேர் பரிதாபமா



(பீஜிங்)

சீனாவின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் 23 வாகனங்கள் அடுத்தடுத்து மோதியதில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சீனாவின் சந்திர புத்தாண்டு விடுமுறைக்காக சொந்த ஊர்களுக்கு சென்ற இலட்சக்கணக்கான மக்கள் தங்களது இருப்பிடங்களுக்கு திரும்பிக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், அந்நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள அன்ஹூயி மாகாணத்துக்குட்பட்ட நெடுஞ்ச... வாகன...

# சிலியில் கடும்... ஆறு பேர் உ...




(சண்டியாகோ)

கடும் இயற்கை சீற்றம் காரணமாக வடக்கு சிலியில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன்போது இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக அங்கு இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெள்ளப்பெருக்கில் 1800 இற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவிலும் முழுமையாகவும் சேதமடைந்... காலமா... நிலைல... கடினமா... பணிகள்...

குறி... ஆரிகா... பகஸ்ட... களைச்... தற்காலி... பட்டுள்ள... துள்ளன... நிலை... அமைச்... டுள்ளது... வெள்ள... டுள்ளது... பாதிக்க...

# சிறுவன் பாலியல் துன்ப... குற்றவாளிகளுக்கு ம...



(சனா)

ஏமன் நாட்டில் 12 வயது சிறுவனை பாலியல் வன்புணர்வு செய்த பின்னர் அவனைக் கொன்ற இரு குற்றவாளிகளுக்கு திறந்த வெளியில் பொதுமக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஏமன் நாட்டில் உள்ள துறைமுக நகர்மான ஏடன் பகுதியில் வசித்து வந்த முஹம்மது சாத் என்ற 12 வயது சிறுவனை கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கடத்திச் சென்ற சிலர் அவனை பாலியல் தேவைக்கு பயன்படுத்திக் கொண்டனர்.

வலியால் கதறித்துடித்த சிறுவனின் அழுகையை கட்டுப்படுத்த முடியாமல் அவனது கழுத்தை கத்தியால் அறுத்துக் கொன்று விட்டதாக இருவரை கைது செய்த பொலிஸார், வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப...

சிறு... பதற்கு... இந்த... சேர்க்க... அவர்க...

# வெளிநாடு

## ள் மோதி விபத்து
## மாக உயிரிழப்பு



ஒன்றன்மீது ஒன்றாக மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 13 பேர் உயிரிழுந்தனர்.

அவசரமாக தங்களது இருப்பிடங்களுக்கு திரும்பி செல்லும் நோக்கத்தில் பனி உறைந்திருக்கும் வீதிகளில் வாகன சாரதிகள் மிதமிஞ்சிய வேகத்தில் சென்றதால் இந்த விபத்துகள் நேர்ந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

நெடுஞ்சாலை வழியாக வந்த 23 வாகனங்கள் அடுத்தடுத்து

## டும் வெள்ளம்
## உயிரிழப்பு

மடைந்துள்ளன. கடந்த ஒரு வார காலமாக நிலவும் சீரற்ற கால நிலையை அடுத்து அங்கு மிகவும் கடினமான சூழ்நிலையிலும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.


குறிப்பாக வடக்கு பிராந்தியமான ஆரிகா, பரினாகொட்டா, அன்டோஃபகஸ்டா மற்றும் தராபகா பகுதிகளைச் சேர்ந்த சுமார் 282 பேர் தற்காலிகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். சிலியின் தேசிய அவசர நிலை மீட்பு மற்றும் உள்துறை அமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது. 173 வீடுகள் முற்றிலும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், 127 வீடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அதேவேளை 1546 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (4-7)

## வான்வழித் தாக்குதல்; 21 பேர் கொன்று குவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்ட் மாகாணத்தில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அப்பாவி மக்கள் 21 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்ட் மாகாணத்தில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அப்பாவி மக்கள் 21 பேர் கொன்று குவிக்கப்பட்ட பரிதாபம் அரங்கேறி உள்ளது. பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளும் ஆவர். (4-7)



## ஆப்கானிஸ்தானில் வான்வழித்தாக்குதல் தலிபான் தளபதி உட்பட ஆறு பேர் பலி

(கஜினி)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படையினர் நிகழ்த்திய வான் தாக்குதலில் தலிபான் தளபதி உள்ளிட்ட 6 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் கஜினி மாகாணத்தில் காராபாக் மாவட்டத்தின் ஜமால் கில் பகுதியில் தலிபான் பயங்கரவாதிகள் பதுங்கி இருந்து நாசவேலை நடத்த சதி செய்து கொண்டிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு உளவு தகவல் கிடைத்தது.



இதையடுத்து அந்த குறிப்பிட்ட இடத்தில் பாதுகாப்பு படைகள் அதிரடியாக வான்தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 6 பேர் பலியாகினர். பலியானவர்களில் தளபதி ரபியுல்லாவும் ஒருவர் என தகவல்கள் கூறுகின்றன. தலிபான்கள் சிலர் படுகாயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த தாக்குதல் பற்றி மாகாண அரசு செய்தி தொடர்பாளர் ஆரிப் நூரி கூறும்போது, "வான்தாக்குதலில் கொல்லப்பட்ட தளபதி ரபியுல்லா மிகவும் கொடூரமானவர். அவர் கொல்லப்பட்டு விட்டதால், அந்தப் பகுதியில் இனி பாதுகாப்பு நிலை மேம்படும்" எனத் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் பற்றி தலிபான்கள் தரப்பில் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (4-7)

## 17 ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவர ஆப்கான் அரசாங்கம் உடனே ஈடுபடவேண்டும்

### பென்டகன் அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றுவரும் 17 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தையில் ஆப்கான் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என பென்டகன் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க பதில் பாதுகாப்பு செயலாளர் பட்றிக் ஷனஹன் இதனை தெரிவித்துள்ளார்.



தலிபான் மற்றும் அமெரிக்க பேச்சாளர்களுக்கு இடையிலான சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஆப்கான் அரசாங்கத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது சமாதான பேச்சுவார்த்தைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின் போது பட்றிக் ஷனஹன், ஆப்கானிலுள்ள அமெரிக்க துருப்புக்கள் மற்றும் ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரஃப் கானி ஆகியோரை சந்திக்கவுள்ளார்.

ஆப்கான் பற்றிய விவாதங்களில் கானி அரசாங்கம் பங்குபற்றுவது முக்கியமானதாகும் என ஷனஹன் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆப்கானிஸ்தான் எதிர்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை ஆப்கானே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## ன்புறுத்தல், கொலை;
## கு மரண தண்டனை!



ஆஜர்படுத்தி இருந்தனர்.

சிறுவனின் பிரேதத்தை மறைப்பதற்கு உதவியதாக ஒரு பெண்ணும் இந்த வழக்கில் குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருந்தார். இவ்வழக்கில் அவர்கள் மூவருக்கும் அண்மையில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களை பொது இடத்தில் வைத்து சுட்டுக்கொல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

தண்டனை விதிக்கப்பட்ட பெண் தற்போது கர்ப்பிணியாக இருப்பதால் அவருக்கான மரண தண்டனையை நிறைவேற்றும் நடவடிக்கை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீதமுள்ள இரு குற்றவாளிகளான வதா ரெஃபாத் (வயது-28) மற்றும் முஹம்மது காலெத் (வயது-31) ஆகியோருக்கு 7.2.2019 அன்று திறந்த வெளியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (4-7)

## ஈராக், சிரியாவிலிருந்து படைகளை அமெரிக்கா திரும்பப் பெறக்கூடாது

### குர்து கிளர்ச்சியாளர்கள் வலியுறுத்து

(பக்தாத்)

ஈராக் மற்றும் சிரியாவிலிருந்து படைகளை அமெரிக்கா திரும்ப பெறக் கூடாது என்று குர்து கிளர்ச்சியாளர்கள் வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து ஈராக்கில் உள்ள குர்து படைத் தலைவர் பர்சானி கூறும்போது, "ஐ.எஸ். இன்றும் இந்த பிராந்தியத்தில் அச்சுறுத்தல் தரும் இயக்கமாகத்தான் உள்ளது. மொசூல் போன்ற மற்றும் ஈராக்கின் வடக்குப் பகுதிகளில் இன்னும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே படைகளை அமெரிக்கா திரும்ப பெறக்கூடாது" எனத் தெரிவித்தார்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கு ஆதரவான படையினர், ஐ.எஸ். பயங்கரவாதிகள் இடையே நடைபெற்று வரும் போர் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன. இந்த உள்நாட்டுப் போரில் குர்து இனப் போராளிகளுக்கு ஆதரவாக அமெரிக்காவின் 2,000 வீரர்கள் போரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த மாதம், "சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டோம். ஐ.எஸ். தீவிரவாதிகளை தோற்கடிக்க அனுப்பப்பட்ட அமெரிக்கப்படை வெற்றி பெற்று விட்டது. ஆதலால், சிரியாவில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறும்" எனத் தெரிவித்தார்.

மேலும் ஈராக்கிலிருந்து இனிவரும் காலங்களில் அமெரிக்கப் படைகள் வெளியேறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## மக்களுக்கு சேவை செய்யாத

# அரசியல்வாதிகளை அடித்து விரட்டவும்!

### அமைச்சர் மனோ ஆவேசம்



(மாத்தளை)

**மக்களுக்குச் சேவை செய்யாத அரசியல் வாதிகளை அடித்து விரட்ட வேண்டும் என அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

மாத்தளையில் நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நடமாடும் சேவையில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில், "இது மக்களது அரசாங்கம். இந்த அரசாங்கத்தை மக்களே ஏற்படுத்தினார்கள். அந்த அரசாங்கத்திலிருப்பவர்களையும் மக்களே தெரிவு செய்தார்கள்.

எனவே அவர்களுக்குச் சேவை செய்யவே நாம் இருக்கின்றோம். அவ்வாறு மக்களுக்குச் சேவை செய்ய முடியாத அமைச்சர்கள் வீட்டுக்குப் போய்விட வேண்டும்.

அவர்கள் நாட்டிற்குத் தேவையில்லை. மக்களுக்குச் சேவை செய்யாத அந்த அமைச்சர்களை மக்கள்தான் அடித்துத் துரத்தவேண்டும்.

இந்த நாட்டில் அனைத்து இனங்களுக்கும் சமத்துவம் ஏற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சர் என்ற வகையில் நான் பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றேன்.

இந்த முயற்சிகளுக்கு பல தடைகள் வந்தாலும் இந்த முயற்சிகளை நான் கைவிடப் போவதில்லை. இதில் நாம் தமிழராகவோ, சிங்களவராகவோ அல்லது முஸ்லிமாகவோ எம்மை அடையாளப்படுத்தாமல் இலங்கையராக அடையாளப்படுத்த வேண்டும்" என அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமைதிப்படையில் குழப்பம்!

## ஆசுவாசப்படுத்த அதிகாரிகள் விரைவு

(மாலி)

மாலியில் ஐ.நா.அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கை படையினர், தாக்குதலுக்கு இலக்காகிய பின்னர், குழப்பமடைந்துள்ளனர் என்றும், இதனால் இராணுவத் தொடரணிக்குப் பாதுகாப்பு வழங்கும் பணி இரண்டு வாரங்களுக்கு மேலாக முடங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் 25ஆம் திகதி மாலியின் மத்திய பகுதியில், ஐ.நா. வாகனத் தொடரணிக்கு பாதுகாப்பு அளித்துக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் துருப்புக்காவி கவசவாகனம் ஒன்று கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகியது.

இந்தத் தாக்குதலில், துருப்புக்காவி பலத்த சேதமடைந்ததுடன், அதில் இருந்த ஒரு மேஜரும், ஒரு சார்ஜண்ட்டும் உயிரிழந்தனர். மேலும் 6 படையினர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர், ஐ.நா. வாகனத் தொடரணிக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியை இலங்கைப் படையினர் நிறுத்தியுள்ளனர்.

மாலியிலுள்ள இலங்கைப் படையினர் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டதை அடுத்தே, கடந்த மாதம் 25ஆம் திகதிக்குப் பின்னர் வாகனத் தொடரணிக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதையடுத்து, மீண்டும் ஐ.நா. தொடரணிக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணிகளை மீள ஆரம்பிக்கும் வகையில், அங்குள்ள இலங்கைப் படையினரை மனதளவில் தயார்படுத்துவதற்காக, இராணுவ உயர் அதிகாரிகள் இருவர் மாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின் உத்தரவின் பேரின், மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க மற்றும் பிரிகேடியர் பிரதாப் திலகரத்ன ஆகியோரே மாலிக்குச் சென்றுள்ளனர்.

அதேவேளை, மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படையினரின் பாதுகாப்புக்கு தேவையான, இலத்திரனியல் கருவிகளை செயலிழக்கச் செய்யும் கருவிகளை இலங்கை அரசாங்கம் அவசரமாக மாலிக்கு அனுப்பியுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பாகிஸ்தானிடம் அவசரமாக கொள்வனவு செய்யப்பட்ட 8 கருவிகள், அங்கிருந்து மாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்காவிடின்

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயார்

### பிமல் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய முடியாவிடின் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சவால் விடும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் என பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களாட்சி நடைமுறையிலுள்ள நாட்டில் அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் ஒரு தனிநபர் கையில் குவிந்து காணப்படும் பொழுது அங்கு சர்வாதிகார ஆட்சியும், முறையற்ற அரசியலமைப்பு பயன்பாடுகளுமே இடம்பெறும்.

இதற்கு நாம் ஏனைய நாடுகளை ஒப்பிட தேவையில்லை. எமது நாட்டில் அரசியல் களத்திலேயே ஒரு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம் எனவும் தெரிவித்தார்.(இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வீதிப் பாதுகாப்பு

எனக்கு தெரிஞ்ச ஒருவர் ஸ்கூட்டர் வைத்திருந்தார். ஒவ்வொரு நாளும் அதை எடுத்துக்கொண்டு வெளியே செல்லும்போது ஒரு எலுமிச்சம்பழத்தை அதன் சக்கரத்துக்கு அடியில் வைத்து காவு கொடுத்து விட்டுத்தான் செல்வார்.

அப்படி ஒரு நம்பிக்கை!

எதற்கு சேர் இப்படி என்று கேட்டேன்.

என்ன சேர் விபரம் தெரியாத ஆளா இருக்கின்றீர்கள்? இந்த காலத்திலே ஒரு வாகனத்தை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றால் திரும்பி வருகிற வரைக்கும் விபத்து எதும் இல்லாமல் வந்து சேரவேணுமே! அதற்காகத் தான் இப்படிச் செய்கின்றேன் என்றார்!

இப்படி சொல்லிக்கொண்டு ஹெல்மெட்டை எடுத்து தலையிலே போட்டுக் கொண்டு சென்றுவிட்டார்.

அவரு அப்படி நினைக்கிறதில் தப்பில்லை நாகரிகம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. போக்குவரத்தும் அதிகரித்துக் கொண்டே வருகுது. அதே வேகத்திலே வீதிகளின் அகலமும்– வசதியும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. 10 பேர் நடந்து கொண்டிருந்த அதே வீதியிலே 100 பேர் நடந்தா ஒருத்தருக்கொருதர் மோதிக்கொண்டு சொரி சொல்லி விட்டுத்தான் போக வேண்டியிருக்கும் வேற வழி இல்லை!

இதே வேகத்தில் போய்க்கொண்டிருந்தா இனிமேல் நடக்கிறவங்களும் ஹெல்மட் போட்டுக்கொள்ளனும் என்று சட்டம் வந்தாலும் வந்துவிடும். அவங்களும் தினம் ஒரு எலுமிச்சம்பழத்தை மிதிச்சுப்போட்டு வெளியிலே செல்கிறது போல ஆயிடும்! என்ன செய்கிறது!

வீதி வசதி அதிகரிக்கனும்!

சனப்பெருக்கம் குறையனும்!

தேவையில்லாத பிரயாணங்களையும் குறைக்கனும்!

இது எல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் இப்ப உள்ள நிலைமையிலே முக்கியமா நாம் செய்ய வேண்டியது வீதி விதிகளை அனுசரிச்சு நடக்கனும்.

முக்கியமா வாகனம் ஓட்டுறவங்க சில பாதுகாப்பு முறைகளை மனசிலே வைத்துக்கொண்டா எவ்வளவோ விபத்துக்களைத் தவிர்க்கலாம். இந்த விஷயத்திலே ரொம்பவும் அனுபவப்பட்ட ஒருவர் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்.

வாகனம் ஓட்டுறவங்க மனசிலே வைத்துக்கொள்கிறது நல்லது. சொல்றது சாதாரணமா தெரியலாம். ஆனாலும் ரொம்ப முக்கியமான குறிப்புக்கள் அவர் 10 குறிப்பு சொல்லியிருக்கின்றார். முதலிலே வாகனம் ஓட்டுகின்றவர்களுக்கு போக்குவரத்து சட்டதிட்டங்கள் எதுவும் தெரியாது. அதனாலே நாங்கள் தான் கவனமாக ஓட்டிக்கொண்டு போகனும் என்று மனசிலே நினைத்திருக்கனும்! இரண்டாவது எப்போதும் இரண்டு கைகளையும் ஸ்டீரிங்வீல் மேலே வச்சுக்கிட்டு ஓட்டனும். சில பேர் வலதுகையை ஸ்டைலா கதவு மேலே வைத்துக் கொண்டு செல்வாங்க!

திடீர் என்று குறுக்கே ஏதாவது வந்துவிட்டா வீலை திருப்புவதற்கு போதுமான பலம் இல்லாமல் போய்விடும்.

மூன்றாவது எதிர்த்தரப்பிலே பார்வையை மறைக்கக்கூடிய அளவுக்கு பெரிதா வண்டியோ பஸ்ஸோ நின்றுகொண்டிருந்தா அதைக் கடந்து செல்வதற்கு முன்னாடி கோன் அடித்துக்கொண்டு கவனமாக மெதுவாக செல்லனும்.

நான்காவது பகலிலே இண்டிகேட்டரை போடக்கூடாது. அது இரவுவேளையில் போடுவதற்காக! பகல் இண்டிகேட்டர் கைதான்!

ஐந்தாவது பொயின்ட்: வீதி சந்திப்புக்களிலே திரும்புகின்றபோது நீங்கள் என்னதான் சிக்னல் காட்டினாலும் பின்னாடி வண்டி ஏதாவது கிட்டத்திலே வருகின்றதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்!

ஆறாவது: வேகமாக சென்றுகொண்டிக்கின்றபோது திடீரென்று பிரேக் போட வேண்டாம்.

ஏழாவது: ஆடுமாடு வீதியிலே நிற்கின்றதா? கிட்டத்திலே போய் திடீர்னு கோன் அடிக்கக் கூடாது... அது மிரண்டு போய் வண்டி மேல் வந்து விழும்.

எட்டாவது: இன்னொரு வண்டியை கடக்கின்றபோது உரசிக்கொண்டு செல்கிற மாதிரி செல்லக்கூடாது. இடைவெளி முடிஞ்ச அளவுக்கு தாராளமாக இருக்கட்டும். அதுக்காக ரொம்பவும் தாராளமா விலகிப் போக வேண்டாம். இன்னொரு ஓரத்திலே புளியமரம் நின்றுகொண்டிருக்கும்!

ஒன்பதாவது பாயின்ட்: எதிர்எதிரா வர்ற இரண்டு வண்டிகள் கடக்கின்றபோது கிட்ட நெருங்கிற சமயத்திலே வேகத்தை குறைச்சிக்கனும்!

பத்தாவது: இரவுவேளையிலே போய்க்கொண்டிருக்கின்றபோது எதிர்த்தரப்பிலே வருகிறவர் வெளிச்சத்தை குறைக்கட்டுமேன்னு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. முதலிலே நாம குறைச்சுட்டு வண்டி கடந்து சென்றதற்குப் பின் வெளிச்சமா ஆக்கிக்கலாம். இந்த பத்து குறிப்பும் சாதாரணமா தெரியலாம். இருந்தாலும் பல விபத்துக்களைப் பார்த்து அனுபவத்திலிருந்து தொகுக்கப்பட்ட குறிப்பு இது.

எல்லாத்துக்கும் மேலே வண்டியை சரியான கண்டிஷன்லே வைத்திருக்க வேண்டும். வண்டியை ஓட்டுறவரும் சரியான கண்டிஷன்லே இருக்கனும்.

ஒரு கல்யாண கோஷ்டியை அழைச்சிட்டுப் போகிறதுக்கு வண்டி ரெடியா இருந்தது! டிரைவர் வந்து சேரல! கூட்டத்திலே இருந்த ஒருவர் எனக்கு பஸ் ஓட்டத் தெரியும் என்றார். சரி என்று எல்லோரும் ஏறி உக்காந்தாங்க. இவரும் மெதுவாக அவங்களை போக வேண்டிய இடத்துக்குக் கொண்டு போய் சேர்த்திட்டாரு! எல்லோரும் இறங்கினதும் ஒருவர் மெதுவாக அந்த பஸ் ஓட்டிக்கொண்டே வந்துரொம்ப தேங்க்ஸ்! எங்களை பத்திரமா கொண்டு வந்து சேர்த்திட்டீங்க! அது சரி... நீங்க டிரைவ் பண்ணிக்கொண்டு வருகின்ற போது வழி முழுவதும் உங்கள் காலுக்கு அடியிலே குனிஞ்சு எதையோ தேடினது மாதிரி தெரிஞ்சிதே என்றார்.

ஆமாங்க! பிரேக் எதென்று தேடிக்கிட்டிருந்தேன். கடைசிவரைக்கும் கண்டுபிடிக்க முடியவில்லை! பரவாயில்லை அதுதான் வந்து சேர்ந்து விட்டோமே என்றார்.

# தோட்டப்புற மக்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் விரைவில் தீர்வு வழங்கும்



## அமைச்சர் சாகல நம்பிக்கை

(மாத்தறை)

தோட்டப்புற மக்களின் பிரச்சினைகளுக்கு சமகால அரசாங்கம் விரைவில் தீர்வு வழங்கும் என்று துறைமுகம் மற்றும் கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் வீடமைப்பு நிர்மாணங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தோட்ட மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சர் பழனி திகாம்பரம் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் தம்மால் இயன்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் பொதுமக்களின் கௌரவத்துக்குரியவர் என்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை தெனியாய பிரதேசத்தில் அமைந்துள்ள செவலகந்த தோட்டத்தில் 50 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தோட்டப்புற மக்களுக்கு மட்டுமல்லாது தென் பகுதியிலுள்ள தோட்டப்புற மக்களுக்கு தேவையான வீடமைப்பு வசதிகளை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் 200 வீடுகளை அமைக்கும் வேலைத்திட்டம் ஒன்றும் அமுல்படுத்தப்பட்டு வருவதாக சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.கைதடி அரச முதியோர் இல்லத்தில் சிறந்த சேவையாற்றி ஓய்வு பெற்ற அத்தியட்சகர் த.கிருபாகரனுக்கான சேவை நலன் பாராட்டுவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதடி மேற்கு இனுங்கித் தோட்ட அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் நடைபெற்றது. · (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

### தோட்டத் தொழிலாளர்கள் மீது

# அமைச்சின் அனுமதியின்றி வழக்கு பதிவு செய்ய முடியாது

## வடிவேல் சுரேஷ் கட்டுப்பாடு



(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர், பெருந்தோட்ட சேவையாளர்களுக்கு காணி மற்றும் வீடு பிரச்சினைகள் தொடர்பில் வழக்குகள் அல்லது விசாரணைகள் இருப்பின் தனது கவனத்திற்கு கொண்டு வரப்படுமேயானால் அதற்கான தீர்வைப் பெற்றுத் தர தான் தயாராக உள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் துறை இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து தனது அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் விசேடமாக கலந்துரையாடல் கடந்த இரு தினங்களாக தனக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு நூற்றுக்கு நூறுவீத தீர்வு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்ட காணிகளில் அல்லது வீடுகளில் குடியிருக்கின்ற பெருந்தோட்ட பூர்வீகத்தை கொண்ட மலையக தோட்ட மக்களுக்கு நிர்வாகத்தால் அநீதிகள் மற்றும் அசௌகரியங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் அனைத்திற்கும் தற்போது தீர்வுகள் எட்டப்பட்டு வருகின்றது.

அத்துடன் பெருந்தோட்ட சேவையாளர்கள் அனைவருக்கும் பெருந்தோட்ட பகுதிகளில் அவர்களுக்கு காணிகள் மற்றும் வீடுகள் வழங்கவும் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவித்த அமைச்சர், காணிகள் மற்றும் வீடுகள் தொடர்பில் சட்ட சிக்கல் உள்ளிட்ட வழக்குகளுக்கு முகம் கொடுப்பவர்கள் இது சம்பந்தமாக குழுவாக அல்லது தனித்தனியாக தகவலை தருவார்களேயானால் அது சம்பந்தமாக நடைமுறை சாத்தியமாகும் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் தோட்டங்களில் தொழில் செய்பவர்கள் அல்லது தோட்டத்தை விட்டு வெளியிடங்களுக்கு சென்று தொழில் புரிபவர்கள் என்ற வித்தியாசமின்றி மலையக தோட்டங்களை பூர்வீகமாக கொண்டவர்கள் என்ற ரீதியில் அவர்கள் தோட்டப் பகுதியில் வீடுகள்,காணிகள் ஆகியவற்றில் குடியிருக்கும் பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதிலிருந்து விடுபட எமது அமைச்சு மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அதேநேரத்தில் இவ்வாறானவர்கள் மீது பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இயங்கும் நிர்வாகங்கள் வழக்குகள் தொடரப்பட்டிருப்பின் வழக்குகள் வாபஸ் பெறப்படுவதுடன் காணிகள் அற்று இருப்பின் காணிகள் வழங்கவும் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடும் தீர்மானத்திற்கும் வந்துள்ளதாக தெரிவித்தார்.

எனவே இந்த தீர்மானங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல அனைவரினதும் ஒத்துழைப்பை கேட்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒரு வருடத்துக்கு மாத்திரம் ரூ.50 ஊக்குவிப்புத் தொகை

## நெருக்கடி ஏற்படுமென்கிறார் நவீன்



(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக வெறும் 50 ரூபாயை வழங்க, அரசாங்கம் முன்வந்துள்ளது.

எனினும் இந்தத் தொகை, ஒரு வருடத்துக்கு மாத்திரமே வழங்கப்படும் என்பதால், அரசியல் ரீதியாகத் தாங்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுமென, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க, அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கு அறிவுரை வழங்கியிருப்பதாக தெரிய வருகிறது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புக்கொடுப்பனவாக, 140 ரூபாய் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணி, இல்லையெனில், அரசாங்கத்துக்கு வழங்கிவரும் ஆதரவை மீளப்பெறப் போவதாகவும் அறிவித்துள்ளது.

இந்நிலையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குவது குறித்து, தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் அரசாங்கத்துக்கும், பெருந்தோட்டக் கம்பனிகளுக்குமான முத்தரப்புப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்த நிலையில், தற்போது கையெழுத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தினூடாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்க முடியாதென்றும் அவ்வாறு வழங்கும் பட்சத்தில், ஏற்கனவே கையெழுத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி விடுமெனவும், அமைச்சர் திகாம்பரத்துக்கு, அரசாங்கத் தரப்பிலிருந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையால், மேலதிகக் கொடுப்பனவாக 50 ரூபாயை, தற்காலிமாக ஒரு வருடத்துக்கு மாத்திரம் வழங்குவதற்கும், அரசாங்கத் தரப்பிலிருந்து பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, தொழிலாளர்களுக்கு இந்த 50 ரூபாய் ஊக்குவிப்புத் தொகையை வழங்கும் பட்சத்தில், வருடமொன்றுக்கு 1,200 மில்லியன் ரூபாய் தேவைப்படுமெனவும் அதற்காக, அரசாங்கத் தரப்பிலிருந்து 600 மில்லியன் ரூபாயும் கம்பனிகளிடமிருந்து 600 மில்லியன் ரூபாயும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு 50 ரூபாய்க் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அதை, வெறும் ஒரு வருடத்துக்கு மாத்திரமே வழங்க முடியுமென்றும் அதன் பின்னர், இந்த கொடுப்பனவு நிறுத்தப்படுமெனவும், இதனால், தொழிலாளர் தேசிய சங்கமானது, தற்போதுள்ள பிரச்சினைகளைவிட, பாரியளவு அரசியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடுமென, அமைச்சர் நவீன் திஸாநாயக்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்கும் கொக்கிளாய் பாலம் விரைவில் அமைக்கப்படும்

## வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவிப்பு



(கொழும்பு)

வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் கரையோரமாக இணைக்கும் கொக்கிளாய் பாலம் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்டு திருகோணமலையில் புல்மோட்டையை இணைக்கும் பாலமாக கொக்கிளாய் ஏரியில்அமையவுள்ளது.

இது தொடர்பான கருத்திட்ட முன்மொழிவு பிரதமரால் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் என்ற வகையில் முன்னெடுக்கப்பட்டது.

இது கடன் உடன்படிக்கை கலந்துரையாடல் செக்குடியரசின் ஏற்றுமதி வங்கியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது. இது வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மூன்று வருடகாலப் பகுதியில் அமுலாக்கப்படவுள்ளது.


இந்த ஒரு கிலோமீற்றர் பாலமானது முல்லைத்தீவுக்கும் திருகோணமலைக்கும் உள்ள பிரயாண தூரத்தை 100 கிலோ மீற்றரால் குறைக்கும்என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர்விவகாரங்கள்அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இதற்கான செலவு சுமார் 9 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பான கடன் தொகை யூரோ 48 மில்லியனில் ஹற்றன் நஷனல் வங்கி மூலம் 7.3 யூரோமில்லியனும், எஞ்சிய 41.5 யூரோ மில்லியன் செக்குடியரசின் ஏற்றுமதி வங்கியின் மூலமும் பெறப்படும்.

இதற்கான மீள் செலுத்தல் காலங்கள் 13வருடங்கள் எனவும் அதில் 3 வருடங்கள் கருணைக் காலங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் செக்குடியரசின் ஏற்றுமதி வங்கியுடன் கலந்துரையாடுவதற்கும் அதன் மூலம் கடனைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-7)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை



01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

## போர்த்துக்கீசர் இலங்கை வந்தபோது...

**கல்லைத் தின்று இரத்தத்தை குடித்த போர்த்துக்கீசர்**

போர்த்துக்கீசர் முதன் முதலாக இலங்கைக்கு வந்தது 1505 ஆம் ஆண்டிலாகும். டொன் லொரென்சே டே அல்மெய்தா என்பவன் தலைமையிலான குழுவொன்று, கடற்கொந்தளிப்புக் காரணமாகக் கப்பல் காலிப் பகுதியில் தரை தட்டியபோது இது நிகழ்ந்தது.

இலங்கை வந்திறங்கிய அவர்கள் பாண் (ரொட்டி) சாப்பிடுவதையும் வைன் குடிப்பதையும் கண்டு உள்ளூர் வாசிகள் வியந்தனர். இதென்ன வெள்ளை நிறக்கல்லைத்தின்று இரத்தத்தை குடிக்கிறார்கள் என்று ஆச்சரியப்பட்டு பேசிக் கொண்டார்கள்.

**சுற்றி வளைத்துப் பேசும்போது பறங்கியர் கோட்டைக்குப் போன மாதிரி பேசாதே என்று கூறும் வழக்கம் எ.்மிடையே இருப்பதைக் காணலாம்.**

போர்த்துக்கீசர் தங்களை கோட்டை இராசதானியை ஆண்ட மன்னனிடம்அழை்ததுப்போகும்படி உள்ளூர்வாசிக...ளைக் கேட்டபோது அவர்கள் மன்னனின் அரண்மனை வெகுதூரத்தில் இருப்பதாக ஒரு தோற்றப்பாட்டை போர்த்துக்கீசருக்குக் காட்டுவதற்காக பல வழிகளால் சுற்றிச் சுற்றி அழைத்துச் சென்றதாக ஒரு கதையுண்டு.

இதனால் யாரும் கதைகளை நேரடியாகப் பேசாமல் சுற்றி வளைத்துப் பேசும்போது பறங்கியர் கோட்டைக்குப் போன மாதிரி பேசாதே என்று கூறும் வழக்கம் எம்மிடையே இருப்பதைக் காணலாம்.

## போர்த்துக்கீசரின் கத்தோலிக்க சமயப் பிரசாரம்

**மன்னாரில் கத்தோலிக்க மதத்திற்கு மாறிய அனைவருக்கும் சங்கிலி அரசன் மரண தண்டனை விதித்து யாழ்ப்பாணத்தின் மீதான போர்த்துக்கீசர் படையெடுப்புக்கு காரணமாயிற்று.**

1518 ஆம் ஆண்டில் இலங்கையின் கோட்டே இராச்சியத்தை ஆண்ட பராக்கிரமபாகுவின் அனுமதி பெற்று, மேற்குக் கடற்கரைப் பகுதியில் வர்த்தக சாலை ஒன்றைப் போர்த்துக்கீசர் கட்டினர். சில காலத்தின்பின் கோட்டையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, அரசனிடம் திறையும் பெற்று வந்தனர்.

அதே சமயம், கத்தோலிக்க சமயப் பிரசாரத்தையும் மேற்கொண்டு வந்தனர். இலங்கையின் தென்பகுதிகளைப்போல், யாழ்ப்பாணத்தில் வணிகம் தொடர்பான கவர்ச்சி போர்த்துக்கீசருக்கு அதிகம் இருக்கவில்லை. எனினும், 1544இல் தென்னிந்தியாவில் மதம் பரப்புவதில் ஈடுபட்டிருந்த பிரான்சிஸ் சேவியர் என்னும் கத்தோலிக்கப் பாதிரியார் யாழ்ப்பாண அரசின் கீழ் இருந்த மன்னாருக்கு மதம் பரப்புவதற்கு ஒருவரை அனுப்பி 600க்கு மேற்பட்ட மக்களைக் கத்தோலிக்கர் ஆக்கினார். இலங்கையரை சமய மாற்றம் செய்த முதற்சம்பவம் இதுவென்று கூறப்படுகிறது.

இதனைக் கேள்வியுற்ற யாழ்ப்பாண அரசன் சங்கிலி மன்னாருக்குச் சென்று மதம் மாறிய அனைவருக்கும் மரணதண்டனை விதித்தான். 1544 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இச் சம்பவத்தில் 600 பேர் வரை உயிரிழந்தனர். இதனால் போர்த்துக்கீசப் பாதிரிமார் சங்கிலி அரசன் மீது கடுமையான பகைமை உணர்வு கொண்டிருந்தனர். சங்கிலி அரசனைத் தண்டிக்கும்படி அவர்கள், அக்காலத்தில் கோவாவில் இருந்த போர்த்துக்கீசப் பிரதிநிதிக்கும், போர்த்துக்கல் நாட்டு மன்னனுக்கும், நெருக்கடி கொடுத்து வந்தனர்.

## யாழ்ப்பாணத்தின் மீதான போர்த்துக்கீசர் படையெடுப்புகள்

இதனைத் தொடர்ந்து சங்கிலியைத் தண்டிப்பதற்கென வந்த போர்த்துக்கீசத் தளபதி ஒருவன் சங்கிலி அரசனிடம் பணம் வாங்கிக்கொண்டு திரும்பிவிட்டான். 1561 ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாக யாழ்ப்பாணத்தைத் தாக்கிய போர்த்துக்கீசர், யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரைக் கைப்பற்றிய போதும், அரசனை பிடிக்கமுடியவில்லை. சங்கிலி மன்னன் தந்திரத்தின் மூலம் ஆட்சியை மீண்டும் தன் வசப்படுத்திக் கொண்டான். எனினும், நாட்டின் ஒரு பகுதியான மன்னாரைப் போத்துக்கீசர் கைப்பற்றிக் கொண்டனர். 1591இல் போத்துக்கீசப் படைகள் மீண்டும் யாழ்ப்பாணத்தைத் தாக்கின.

நல்லூரைக் கைப்பற்றி அரசனைக் கொன்ற போர்த்துக்கீசர், எதிர்மன்னசிங்கம் என்னும் இளவரசன் ஒருவனை அரசனாக்கி அவனிடம் திறை பெறவும் ஒப்பந்தம் செய்துகொண்டு திரும்பினர். இதன் பின்னர் யாழ்ப்பாணத்து நடவடிக்கைகளில் போர்த்துக்கீசர் பெருமளவு செல்வாக்குச் செலுத்தியதுடன், மதப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட தடையேதும் அற்ற வாய்ப்பைப் பெற்றார்கள். இந்த வாய்ப்பைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்ட போர்த்துக்கீசப் பாதிரிமார்கள், வசதியான இடங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டு, தேவாலயங்களை அமைத்ததோடு, போர்க்காலங்களில் பயன்படக்கூடிய வகையில் அவற்றை உறுதியாகவும், உரிய வசதிகளுடனும் அமைத்திருந்தனர். 1620 ஆம் ஆண்டில் யாழ்ப் பாண அரசு போர்த்துக்கீசர் வசம் செல்லும் வரையில் அதன்தலைநகரம் என்ற வகையில் நல்லூரே இப் பகுதியில் பிரதான நகரமாக இருந்தது.



**போர்த்துக்கீசர் கால ஞானஸ்தானத் தொட்டி**
**தொல்பொருள்காட்சிச்சாலை, யாழ்ப்பாணம்**

அக்காலத்தில் இன்றைய யாழ்ப்பாண நகரத்துள் அடங்கும் கொழும்புத்துறையில் ஒரு சிறிய இறங்குதுறையும், பின்னர் போர்த்துக்கீசரின் கோட்டை இருந்த இடத்தில் முஸ்லிம் வணிகர்களின் இறங்குதுறையும், பண்டகசாலைகளும், சில குடியிருப்புக்களும் இருந்ததாகத் தெரிகிறது.

**யாழ்ப்பாணக் கோட்டை இருந்த இடத்தில் முஸ்லிம் வணிகர்களின் இறங்கு துறையும் பண்டகசாலைகளும் சில குடியிருப்புக்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.**

சமயம் பரப்புவதற்காக வந்த கிறிஸ்தவப் பாதிரிமார்கள் யாழ்ப்பாணக் கடற்கரையோரத்தில் கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றையும், அவர்களுக்கான இருப்பிடங்களையும் கட்டியிருந்தனர். பின்னர் முஸ்லிம் வணிகர்களின் பண்டகசாலைகள் இருந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு அவ்விடத்தில் முன்னரிலும் பெரிதாகக் கட்டடங்களைக் கட்டியிருந்ததாகக் கூறப்படுகிறது.

இக்கட்டடங்கள் வழிபாட்டிடங்களாகவும், சமயம் பரப்பும் இடங்களாகவும் இருந்தது மட்டுமன்றிச் சில சமயங்களில் போர்த்துக்கீசருக்கான ஆயுதக் கிடங்குகளாகவும், பாதுகாப்பு இடங்களாகவும் இருந்தன. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை யாழ்ப்பாண அரசன் நாவாந்துறைப் பகுதியில் குடியேற்றினான். கரையோரப் பகுதிகளில் மீன்பிடிக் குடியேற்றங்களும் இருந்தன. தற்போதைய யாழ்ப்பாண நகரத்தின் மையப்பகுதி அமைந்துள்ள இடங்கள் அக்காலத்தில் சதுப்பு நிலங்களாகவும், பனங்கூடல்களாகவுமே இருந்ததாகக் கூறப்படுகிறது.

## போர்த்துக்கீசரின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாண நகரம்

1620 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைத் தங்களுடைய நிர்வாக மையம் ஆக்கிய போர்த்துக்கீசர், முன்னர் தங்களுடைய தேவாலயம் அமைந்திருந்த இடத்தில் சதுர வடிவில் அமைந்த பெரிய கோட்டையொன்றைக் கட்டினார்கள். மதிலால் சூழப்பட்டிருந்த இக்கோட்டையுள் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும், வேறு நிர்வாகக் கட்டடங்களும் அமைந்திருந்தன. கோட்டைக்கு வெளியே இன்று பறங்கித் தெரு என அழைக்கப்படும் பகுதியில் போர்த்துக்கீசரின் இருப்பிடங்களோடு கூடிய யாழ்ப்பாண நகரம் அமைந்திருந்தது. யாழ்ப்பாண நகரில் அமைந்திருந்த கட்டடங்களுள் கோட்டையையும் அது சார்ந்த கட்டடங்களையும் தவிர, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மதப்பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த கத்தோலிக்க மடங்களைச் சேர்ந்த பெரிய கட்டடங்களும் இருந்ததாகத் தெரிகிறது.

**யாழ்ப்பாணத்திலுள்ள பறங்கித் தெருவும் சோனக தெருவும்பறங்கிய ரும் சோனகரும் 16 ஆம் நூற்றாண்டில் தமிழ் சமூகத்துடன் வாழ்ந்ததை எடுத்துக் காட்டுகின்றன.**

உள்ளூர் மக்களின் குடியிருப்புக்கள் அக்காலத்தில், பெரும்பாலும் நல்லூரை அண்டியே இருந்திருக்கக்கூடும். இன்றைய யாழ்ப்பாண நகரத்துள் அடங்கும் சோனகதெரு என்று அழைக்கப்படும் இடத்தில் சிறிய அளவில் முஸ்லிம் வணிகர்களின் குடியிருப்புக்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இன்றைய கரையூர், பாசையூர் ஆகிய இடங்களை அண்டிச் சிறிய சிறிய மீன்பிடிக்குடியிருப்புக்கள் இருந்ததாகத் தெரிகிறது.

(தொடரும்...)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

168

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

மேலும் பலர் இந்த வழியை முனைப்புடன் தொடர்ந்தனர். கந்தர்மடத்தைச் சேர்ந்த சுவாமிநாத பண்டிதர், மட்டுவிலைச் சேர்ந்த எம்.கே. வேற்பிள்ளை, புலோலியைச் சேர்ந்த என். கதிரவேற்பிள்ளை, தில்லைநாதநாவலர், ஊரெழுவைச் சேர்ந்த சிவபாதசுந்தரனார், சரவணமுத்துப்பிள்ளை, வேலணையூர் கந்தப்பிள்ளை ஆகியோர் அவர்களுள் தனியிடம் பெறுபவர்கள்.

இவ் அறிஞர்கள் யாவரும் இப்பணியை யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் மட்டுமன்றி இலங்கையின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டிலும் தொடர்ந்தனர். இதன்வழி அவர்கள் சைவசமயத்தையும் தலைசிறந்த தமிழ் இலக்கிய ரசனையையும் குறிப்பிடுமளவுக்கு விரிவாக்கம் செய்தனர்.

திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவிலில் சைவ சமயத்தைப் பற்றிய ஓர் உரையும் கிறிஸ்தவ எதிர்ப்புச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்ததாக 1890 பெப்ரவரியில் இந்து சாதனம் என்ற தேசியப் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

26 மார்ச் 1890, 7 மே 1889 இந்து சாதன இதழ்கள் இந்த நிகழ்வுகள் எழுப்பிய விடயங்களை ஆராய்ந்துள்ளன. மட்டக்களப்பில் மேற்கொண்டு நிகழ்ந்த கலந்துரையாடல்களை 9' ஒக்டோபர் 1889 இந்து சாதனம் வெளியிட்டது.

13 ஒகஸ்ட் 1890 இந்து சாதன இதழ் இவற்றையொத்த செயற்பாடுகள் கொழும்பில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றது. தமிழ்ப் பத்திரிகைகளான இந்து சாதனமும் இலங்கை நேசனும் முறையே 1889 இலும் 1877 இலும் முதன்முதலில் வெளிப்பட்டனவாகும்.

இவற்றைப் போன்ற தமிழர்களின் சமகாலப் பிரச்சினைகள் பற்றிக் குரல் கொடுக்கும் வாய்ப்பை வழங்கும் உள்நாட்டுப் பத்திரிகைகள் இதற்கு முன்னர் இருக்கவில்லை. சைவசமயப் போராட்டம் இவற்றின் காலத்திற்கு முற்பட்டிருந்ததால் அந் நிகழ்வுகளையிட்டுத் தமிழர்களுக்குத் தெரிவிக்கப் பத்திரிகைகள் இல்லாதிருக்கும்.

இக் காலகட்டத்துக் கிறிஸ்தவ எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு வெகுசன ஆதரவு இருந்தது என்பதைக் குறிப்புணர்த்தும் சான்றுகள் பெருமளவு உள்ளன. எல்லாச் சமயச் சொற்பொழிவுகளுக்கும் குழுநிலைக் கலந்துரையாடல்களுக்கும் கிறிஸ்தவ எதிர்ப்புப் பிரசார உரைகளுக்கும் செல்வதில் ஆர்வம் காட்டி தமது சமயத்தையும் கலாசாரத்தையும் பாதுகாக்க .வேண்டுமென்ற அழைப்புக்கு மக்கள் பூரண ஆதரவு நல்கினர். பொது மக்களில் சிலர் தனியாகவும் கூட்டாகவும் கிறிஸ்தவ மிஷனரிமாருடன் மோதல்களில் ஈடுபட்டனர். வெஸ்லியன் மிஷனரிப் பங்களாவில் சைவர்களுக்கும் வெஸ்லியன் மிஷனரிமாருக்கும் இடையிலே நிகழ்ந்த சச்சரவை இலங்காபிமானி இதழ் பின்வருமாறு சொல்கின்றது.

கொடுக்குக் காட்டிக்கொண்டு, வீதியில் இரு திக்கிலும் இருந்து வந்த சைவரையும் பிறர் சிலரையும் பிரவேசிக்கவொட்டாமல் தடைபண்ணிக் கொண்டார்கள். தெருவில் நின்ற சைவப் பிரபுக்களில் சிலர் பாதிரிமார்களையும் கிறிஸ்தவர்களையும் வாயிலெழுந்தபடி தூஷித்துக் கேலி பண்ணினார்கள்.

சில வருடங்களின் பின்னர், 1891 இந்துசாதனம் 'சைவ இளைஞருக்கும் வெஸ்லியன் மிஷனரிமாருக்கும் இடையே நடந்த ஒரு வெளிப்படையான மோதலை அறிவித்துள்ளது. இந்த மோதல் சைவத்தமிழரின் கோபத்தைக் கிளறி தமது சைவசமயத்தையும் பாரம்பரியங்களையும் அனுட்டிக்க வேண்டுமென்ற அவர்களின் வேட்கையை அதிகரிக்கவே உதவியது.

இந்தத் தமிழ் மறுமலர்ச்சியின் காரணமாக எழுந்த எதிர்ப்பினால் கிறிஸ்தவர்களின் மதப்பிரசாரம் தோல்வியடைய மேலும் ஒரு தடவை மதமாற்றங்கள் தடைப்பட்டன.

நாவலரின் முயற்சி சிறிய அளவில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டபோதும் அது விரைந்து ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுக்குப் பரவி தமிழ் சுயவுணர்வைப் பலப்படுத்தி அதனைத் தோற்கடிக்க முடியாது எனத் தோன்றுமளவுக்கு விரிவாக்கம் பெற்றது.

நாவலரினாலும் அவரைப் பின்பற்றியவர்களினாலும் சமய மறுப்புகள், பிரசுரங்கள், நூல்கள் என்பன அவருடைய அச்சகத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் மத்தியில் பரந்த அளவில் விநியோகிக்கப்பட்டதுடன் வைசமயப் பிரசாரங்களும் தலைசிறந்த சைவத் தமிழிலக்கியங்களின் பதிப்புகளும் வெளியிடப்பட்டன.

1852 இல் நாவலர் சி.விநாயகமூர்த்தி செட்டியாருடன் இணைந்து இருபது வருடங்களுக்கு முன்னர் முத்துக்குமாரக் கவிராயர் ஆக்கிய ஞானக்கும்மியை அச்சிட்டார். இவ் ஆக்கம் கிறிஸ்தவர், மிஷனரிமார் ஆகிய இரு சாராரையுமே கண்டனம் செய்ததனால் அவர்கள் மிகவும் கொதிப்படைந்திருந்தனர் என்பதை மோணிங் ஸ்ராரில் ஞானக்கும்மியைத் தாக்கி எழுதியிருந்தது தெரிய வருகின்றது.

நாவலர் இதற்கு மறுப்பாக வச்சிரதந்தம் எனும் நூலை எழுதி அதனை விநாயகமூர்த்திச் செட்டியாரின் பெயரில் வெளியிட்டதுடன் அதே போன்று 1853 இல் நக்கீரரின் திருமுருகாற்றுப் படையையும் வெளியிட்டார்.

இது முருகன்மேல் பாடப்பெற்ற பக்திச் செய்யுளாக முருகக் கடவுள் பற்றிய தத்துவக் கருத்தாக்கங்களை நக்கீரர் விபரித்திருந்தார்.

(தொடரும்)



“திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவிலில் சைவசமயத்தைப் பற்றிய ஓர் உரையும் கிறிஸ்தவ எதிர்ப்புச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்ததாக 1890 பெப்ரவரியில் இந்து சாதனம் என்ற தேசியப் பத்திரிகை செய்தி வெளியிட்டது. 26 மார்ச் 1890, 7 மே 1889 இந்து சாதன இதழ்கள் இந்த நிகழ்வுகள் எழுப்பிய விடயங்களை ஆராய்ந்துள்ளன. மட்டக்களப்பில் மேற்கொண்டு நிகழ்ந்த கலந்துரையாடல்களை 9 ஒக்டோபர் 1889 இந்து சாதனம் வெளியிட்டது”

# சுங்கத்துறையில் ஊழல் எவரையும் பாதுகாக்கும் அவசியம் கிடையாது

## மங்கள சமரவீர விளக்கம்



(கொழும்பு)

சுங்கத்துறையில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பில் எவரையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் தமக்குக் கிடையாதென நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க சுங்கத்துறையில் இடம்பெறும் சகல விதமான ஊழல் மோசடிகள் தொடர்பில் முழு நாட்டுக்கும் தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பை அங்குள்ள பிரதானிக்கும் தொழிற் சங்கங்களுக்கும் வழங்குவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள பி.எம்.டபிள்யூ சொகுசு வாகனம் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டமை, பாக்கு மற்றும் மிளகு ஏற்றுமதியின் போது இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் அது தொடர்பான அறிக்கையை அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கும் பொறுப்பை சுங்கப்பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். சாள்ஸ்'க்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# சட்டவிரோத மின்சார பாவனை தொடர்பில் 2500 பேர் கைது

(கொழும்பு)

கடந்த வருடம் மின்சாரப் பாவனை தொடர்பில் மோசடியில் ஈடுபட்ட 2,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுள் மின்மானிகளில் அளவீடுகளை மாற்றியமைத்தல், சட்டவிரோத மின்சார இணைப்பு போன்ற குற்றங்களும் இவற்றில் அடங்கும். இத்தகைய குற்ற மிழைத்தவர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டப்பணம் மூலம் இலங்கை மின்சார சபைக்கு 130 மில்லியன் ரூபாய் பெறப்பட்டதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# கொழும்பு குப்பைகளை புத்தளத்தில் கொட்டுவதற்கு எதிர்ப்பு

# 13- 15 ஆம் திகதி வரை கறுப்பு தினமாக பிரகடனம்

(புத்தளம்)

புத்தளத்தில் நாளை 13 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான நாட்களை கறுப்பு தினமாக சர்வ மதங்கள் சபை பிரகடனம் செய்து ள்ளது. கொழும்பிலுள்ள குப்பைகளை அறுவாக்காட்டில் கொட்டுவதற்கு எதிராக முன்னெடுக்கப்படும் நீதிமன்ற வழக்கு இறுதி நிலையை எட்டியுள்ள நிலையில் அதனை பலப்படும் முகமாக இந்த கறுப்பு நாள் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

எதிர்கால சந்ததியினரை இல்லாதொழிக்கும் செயற்பாடாக அமையும் இந்த திட்டத்திற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து கறுப்பு தினமாக குறித்த நாட்களை அனுஷ்டிக்க வேண்டும் என சர்வ மதங்கள் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

அந்தவகையில் நாளை 13 ஆம் திகதி வீடு. வாகனங்களில் கறுப்புக் கொடி கட்டுமாறும், வேலைக்குச் செல்பவர்கள் கறுப்பு பட்டியணிந்து எதிர்ப்பை வெளிக்காட்டுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அடுத்த நாள் கொழும்பு காலிமுகத்திடலில் நோன்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும், மறுதினம் வெள்ளிக்கிழமை முழு கடையடைப்பிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# "உயிர் அச்சுறுத்தலே பதவி விலகக்காரணம்"



(கொழும்பு)

சிற்றுண்டி உணவுகளின் விலை குறைக்கப்படுவதாக குறிப்பிட்டதை தொடர்ந்து எழுகின்ற உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைத்தும் எந்தவிதமான தீர்வும் கிடைக்கப் பெறவில்லை. இதன் காரணமாக தான் பதவி விலகுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்பட்ட பொழுது பிரதமராக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சடுதியாக குறைக்கப்பட்டன. இதன்போது சிற்றுண்டி உணவுப் பொருட்களின் விலைகளையும் குறைக்க எமது சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஒரு தரப்பினர் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

எதிர்ப்பினை வெளிப்படுத்தியவர்களின் ஊடாக ஒரு கட்டத்தில் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொண்டும் எவ்விதமான தீர்வும் இது வரை காலமும் கிடைக்கப் பெறவில்லை. இதன் காரணமாகவே சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஹோட்டல்களை பரிசோதிக்கும் பொழுது தேசிய நுகர்வோர் அதிகார சபை தண்டப்பணம் அறவிடுகின்றது. இதனூடாக வருடத்திற்கு 9 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கப் பெறுகின்றது. கிடைக்கப் பெறுகின்ற இந்த வருமானம் முழுமையாக அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றதா? என்பது தொடர்பில் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் சங்கம் கேள்வியெழுப்பும் பொழுது எமக்கு எதிராக செயற்படுகின்றனர்.


சிற்றுண்டிச்சாலை சங்கத்தினர் அத்தியாவசிய சில உணவுப் பொருட்களின் விலைகள்ளக் குறைக்க தீர்மானிக்கும் போது அதற்கு பல்வேறு தரப்பில் இருந்து நெருக்கடிகளே ஏற்படுகின்றன. இந்நிலையில் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட தீர்மானம் ஆட்சி மாற்றம் காரணமாக முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. இவ்விடயத்தில் அரசாங்கம் நேரடியாக தலையிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1641

Search for people, places and things

## சுதா

தாங்கிப் பிடிக்க தாயும் தூக்கி நிறுத்த தந்தையும் இருக்கும் வரை எந்த உறவும் வீழ்ந்து போவதில்லை



## சஞ்சய்

எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து விட்டுப் போங்கள்... உங்களால் ஒருவர் அழவோ அழியவோ கூடாதென்ற கொள்கையை மட்டும் கடைப்பிடியுங்கள்




## கவின்

சொந்தம் என்று நினைத்துக்கொண்டிருப்பது எல்லாம் நமக்குச் சொந்தமல்ல... நம் உயிரும் உடலுமே நமக்குச் சொந்தமில்லாத போது பிறவற்றை எப்படிச் சொந்தம் கொண்டாட முடியும்



## வருண்

பணத்தைத் தேடுவதற்குள் நிம்மதி தொலைந்து விடுகிறது... நிம்மதி தேடும் பொழுது வாழ்க்கை முடிந்து விடுகிறது



## சாக்ஷி

வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல... மற்றவர்களின் மனதில் நீ வாழும் வரை



## சினோஜா


உனக்காக ஒருவன் வாழ்ந்தான் என்பதைவிட உன்னால் ஒருவன் வாழ்ந்தான் என்பதே சிறந்தது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ரஷ்யாவிடம் எம்.ஐ.-17 உலங்குவானூர்திகளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை பேச்சு

## தூதுவர் தயான் ஜெயதிலக தகவல்



(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்கு எம்.ஐ.-17 உலங்குவானூர்திகளைக் கொள்வனவு செய்வது குறித்து, ரஷ்யாவுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

ரஷ்யாவுக்கான இலங்கை தூதுவர் கலாநிதி தயான் ஜெயதிலக இந்த தகவலை, ரஷ்ய நாளிதழான ஸ்புட்னிக்கிடம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா அமைதிப் படையின் பணிகளுக்காக ரஷ்யாவிடம் எம்.ஐ.-17 உலங்குவானூர்திகளை வாங்குவது குறித்து குழுவொன்று கலந்துரையாடி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கையின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் மொஸ்கோவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, எம்.ஐ.-17 உலங்குவானூர்திகளைக் கொள்வனவு செய்யும் விவகாரமே முக்கிய நிகழ்ச்சி நிரலாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

"பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்ற போதும், இன்னமும் எந்த ஆவணங்களிலும் கையெழுத்திடப்படவில்லை.

அத்துடன் எத்தனை உலங்குவானூர்திகளை இலங்கை விமானப்படை கொள்வனவு செய்யப் போகிறது என்றும் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யத்தயாரிப்பான எம் ஐ.17 உலங்குவானூர்தி கனை இலங்கை விமானப் படை, 1993ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தி வருகிறது.

இரட்டைஇயந்திரம்கொண்ட நடுத்தர வகை எம்.ஐ.17 உலங்குவானூர்திகள், சரக்கு போக்குவரத்து, பயணிகள் போக்குவரத்து, தேடுதல் மற்றும் மீட்பு, பறக்கும் வைத்தியசாலை, தீயணைப்பு போன்ற தேவைகளுக்காக பல்வேறு வடிவங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.

100இற்கும் மேற்பட்ட நாடுகளில் இவை பயன்பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாடாளுமன்ற மோதல் விவகாரம்

# விசேட குழுவின் விசாரணை அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்ப நடவடிக்கை





(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் மோதலில் ஈடுபட்டு, சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியவர்கள் தொடர்பில் பிரதி சபாநாயகர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணை அறிக்கை, சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதில் எவராவது நாடாளுமன்ற சிறப்புரிமைச் சட்டத்தை மீறியிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்மானிப்பதற்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய இந்த அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கவுள்ளார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடிய நாடாளுமன்ற சிறப்புரிமை பற்றிய குழு, இந்த அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்புவது பற்றிய முடிவை எடுத்திருப்பதுடன், எதிர்வரும் வாரத்தில் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும் என்றும் சபாநாயகரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 14, 15 மற்றும் 16ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் மோதலில் ஈடுபட்ட உறுப்பினர்களுக்கு எதிராக சட்டரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கடந்த வெள்ளிக்கிழமை கூடிய சிறப்புரிமைக் குழு பரிந்துரைத்துள்ளது.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணவீர, பத்ம உதயசாந்த ஆகியோர் பொலிஸாரைக் கடமையைச் செய்யவிடாது தடுத்தமை மற்றும் அவர்கள் மீது மிளகாய்தூள் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சன் ராமநாயக்க மற்றும் பாலித தெவரப்பெரும ஆகியோர் சபைக்குள் கத்தியுடன் நுழைந்து, அச்சுறுத்தியமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள் என்றும் சிறப்புரிமைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான திலும் அமுனுகம மற்றும் ஆனந்த அளுத்கமகே ஆகியோர் சபாநாயகரின் மேசையிலிருந்த ஒலிவாங்கி கட்டமைப்புக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இதுவரை எந்தவொரு அறிக்கையும் தனக்குக் கிடைக்கவில்லை என சட்டமா அதிபர் ஜயந்த ஜெயசூரிய தெரிவித்தார். அவ் அறிக்கை கிடைத்ததும் அதிலுள்ள சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கையகப்படுத்திய அரச காணிகளை மீட்க வேண்டும்



(நாவிதன்வெளி )

நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள அரச காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்கும் நபர்களை அடையாளப்படுத்தி பிரதேச சபைக்கு அறிவிக்குமாறு நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் கலையரசன் தெரிவித்துள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச சபையின் 12ஆவது அமர்வு கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது அரச காணிகள் அபகரிக்கப்பட்டு தனியார்மயப்படுத்தப்பட்டு வருகின்றன என பிரதேச சபை உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு பதிலளித்த, தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ' (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 70 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 75 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 160 | 200 |
| தக்காளி | 70 | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 50 | 60 | 40 | 60 |
| கரட் | 100 | 100 | 70 | 120 |
| பூசணி | 30 | 20 | 30 | 40 |
| புடோல் | 50 | 60 | 30 | 80 |
| வாழைக்காய் | 90 | 70 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 55 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 500 | 60 |
| போஞ்சி | 50 | 60 | 60 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | — | 50 | 100 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 130 | 120 | 110 | 150 |
| வெங்காயப்பூ | 50 | 60 | 60 | 80 |
| முள்ளங்கி | 30 | 60 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 15 | 40 |
| வல்லாரை | 60 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 100 | 50 | 110 | 80 |

# செய்தித்துளிகள்

## ஹெரோயின், கைக்குண்டுடன் ஒருவர் அதிரடியாகக் கைது

(கிராண்பாஸ் )

ஹெரோயின் மற்றும் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள கைக்குண்டு ஒன்றுடன் நபரொருவர் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்பாஸ் - மாதம்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடமிருந்து 23 கிராம் 460 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் கொழும்பு 15 ஹேனமுல்ல வீதி பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. (7)

## படைப்புழுவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது



(கொழும்பு)

படைப்புழுவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனவே வழமைபோல் விவசாயிகள் சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறும் திணைக்களம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

82 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டிருந்த சோளமானது படைப்புழுவின் தாக்கத்தால் 5 சதவீதமே அழிவடைந்துள்ளதெனவும் தற்போது சேனாவின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதெனவும் விவசாயத் திணைக்களத்தின் திட்ட மற்றும் பயிற்சி மத்திய நிலையப் பணிப்பாளர் கே.பி.குணரத்ன தெரிவித்துள்ளார். அத்துடன் சோள உற்பத்திக்காக புதிய முறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)


## க.பொ.த. (உ/த) மீளாய்வுக்கு 65 ஆயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தர பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கென பரீட்சை திணைக்களத்திற்கு 65 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 7,23,000 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இவர்களுள் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையைப் பெற்றுள்ளனர். பரீட்சை மோசடியில் ஈடுபட்ட 119 பேரின் பரீட்சை முடிவுகள் இடைநிறுத்தி வருவதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பி.பூஜித தெரிவித்தார். (இ-7)

## பீதியில் உறைய வைத்த இராட்சத மலைப்பாம்பு




(புத்தளம் )

புத்தளம் - மெல்லன்குலம் பகுதியில் சில தினங்களாக உலாவி கொண்டிருந்த பாரிய மலைப்பாம்பை வனவிலங்கு அதிகாரிகள் பிடித்துள்ளனர். பிரதேசவாசிகள் வழங்கிய தகவலையடுத்து இந்த மலைப்பாம்பு பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 10 அடி நீளமான இந்த மலைப்பாம்புக்கு 10 வயது அளவில் இருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிடிக்கப்பட்ட மலைப்பாம்பை தப்போவ வனப் பகுதியில் வனவிலங்கு அதிகாரிகள் விடுவித்துள்ளனர். (7)

# சிறுவர் அரங்கம்

# பேயால் வந்த வாழ்வு!



எதற்கும் அஞ்சாமல், நேர்மையுடன் வாழ்ந்தால் வாழ்வில் சிறந்த இடத்துக்குச் செல்வோம் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் இந்த மதின் என்ற இளைஞனின் கதை.

முன்னொரு காலத்தில் மதின் என்ற இளைஞன் பொன்னேரி என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்து வந்தான். இவனது பெற்றோர் இறந்துவிட்டனர். இனி அந்த ஊரில் இருக்கப் பிடிக்காமல் பக்கத்திலுள்ள ஊருக்கு வேலை தேடிச் சென்றான். உச்சி வெயில் அதிகமானது.

அப்போது ஆலமரத்தடியில் படுத்து உறங்கினான். அவனை யாரோ தட்டி எழுப்புவது போல் இருந்தது. தூக்கம் கலைந்து விழித்த போது ஒரு பேய் மரத்தின் கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது. பேய்... பேய்... என்று அலறினான்.

“தம்பி பயப்படாதே... நானும் உன்னைப் போல் மனிதன் தான். தற்சமயம் பேயாக இருக்கிறேன்”

மதினுக்கு கை, கால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

“உன் பெயரென்ன தம்பி?”

“மதின்!”

“எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?”

“வேலை தேடி நகரத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன்”

“நானும் உன்னைப் போல் இருந்தவன் தான். நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்து வந்தேன். ஒரு நாள் இந்தக் காட்டிற்கு வந்தேன். இங்கே தவம் செய்த முனிவரைப் பார்த்து கேலியாகச் சிரித்தேன். ஆத்திரம் அடைந்த முனிவர் என்னை பேயாகும்படி சபித்துவிட்டார்.

“பிறகு நான் அவரைப் பார்த்து மன்றாடினேன்.

“ஐயா, தயவு செய்து இந்தச் சாபத்திற்கு ஏதேனும் விமோசனம் சொல்லுங்கள். இப்படி மனித பேயாய் நான் எத்தனை நாட்கள் திரிவது?” என்று கேட்டான்.

“சரி, நீ கெஞ்சிக் கேட்டுக் கொள்வதால் உனக்கு விமோசனம் தருகிறேன். உன் கதையை எந்த மனிதன் பொறுமையோடு கேட்கிறானோ அன்று நீ மீண்டும் மனிதனாவாய். பிறகு விண்ணுலகுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இம்மனிதப் பிறவியிலிருந்து விடுதலை அடைவாய்...” என்றார்.

“பல காலம் நான் மற்றவர்களிடம் என் கதையைச் சொல்ல முயன்றேன். அவர்கள் என்னைப் பார்த்ததும் ஓடிவிடுகிறார்கள்” என்று கூறிய பேய் மறைந்து போய் அழகான வாலிபன் தோன்றினான். சிறிது நேரத்தில் அவன் மேல் எழுந்து வானத்தை நோக்கிச் சென்றான். என்னை “எப்போது நினைத்துக் கொண்டாலும் உனக்கு நல்லதே நடக்கும். நீ எடுத்த காரியத்திலும் வெற்றி அடைவாய்” என்ற பேய் மேகத்தின் நடுவில் மறைந்து போனது.

மதினுக்கு எல்லாமே கனவு போல் இருந்தது.

புதிய நகரை அடைந்தான். அங்கே நாடே விழாக் கோலம் கொண்டது. என்ன விடயம் என்று கேட்டான்.

“உனக்குத் தெரியாதா? அரசரின் பிறந்த நாள் விழாவை நாளை கொண்டாட இருக்கின்றனர். வாண வேடிக்கைகள், கலை நிகழ்ச்சிகள், போட்டிகள் எல்லாம் நடக்கும். ஏழைகளுக்கு அன்னதானம் நடக்கும். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசும் அரண்மனை உபசரிப்பும் கொடுப்பார்கள்” என்றான்.

சிலம்பம், மல்யுத்தம் என நடந்த அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று அரசரின் சிறப்பு விருந்தினராக விரும்பிய மதின் பேயை மனதில் நினைத்துக் கொண்டான். பேயின் உதவியால் எல்லா போட்டிகளிலும் வென்றான்.

அவனுக்கு ஓர் அறை கொடுக்கப்பட்டது. அரண்மனை உணவும் வழங்கப்பட்டது. ஒரு வாரம் தங்கி விருந்துண்டு தன் அறைக்குச் சென்றான் மதின்.

அங்கிருந்த அழகிய மஞ்சத்தில் படுத்தவுடன் உறக்கம் வந்துவிட்டது. நடு இரவில் விழித்த மதின், தன் அறையில் சிறிது நேரம் உலாவினான். அப்போது சுவரில் காட்டெருமையின் கொம்பு பதிக்கப்பட்டுள்ளதைக் கண்டான். அதைப் பிடித்துப் பார்த்தபோது “கிர்ர்...” என்ற சத்தம் கேட்டது.

அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது. அதைப் பிடித்துத் திருகிய போது, தரையில் ஒரு சுரங்க வழி ஏற்பட்டது. ஒரு தீபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு படிக்கட்டுகளில் இறங்கினான்.

கீழே பெரிய அறை ஒன்று இருந்தது. எங்கு பார்த்தாலும் போர் ஆயுதங்களும் முத்து மாலைகளும் தங்க மாலைகளும் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தன.

தூரத்தில் யார் நின்று கொண்டிருப்பது? அமைச்சர் ராஜசேகர்... இங்கு என்ன செய்கிறான்? உற்றுப் பார்த்தான். நகைகள், பணத்தை திருடி பையில் போட்டுக் கொண்டிருந்தான்.

அங்கிருந்த வாளை உருவி, அவனை வெட்டச் சென்றான் மதின். அதற்குள் இரகசிய வழியால் தப்பி விட்டான் அமைச்சன்.

பிறகு மதின் தன் இருப்பிடத்திற்குச் சென்று காட்டெருமைக் கொம்பைத் திருகி தரையை முன்பு போல மூடச் செய்தான்.

இதை எப்படியாவது அரசரிடம் சொல்ல வேண்டும் என்று மனதில் உறுதி செய்து கொண்டான். இரவோடு இரவாக அமைச்சரைப் பற்றி மன்னனிடம் கூறினான்.

பல நாட்களாக பொக்கிஷ அறையில் திருட்டுப் போவதை அறிந்திருந்த அரசர், எத்தனையோ காவல் போட்டும் கண்டுபிடிக்க முடியாத இரகசியத்தை மதின் சொன்னதும் மகிழ்ந்தார். உடனே அமைச்சரை கைது செய்ய ஆட்களை அனுப்பினார் மன்னர்.


குடும்பத்துடன் தப்ப இருந்த அமைச்சரை கைது செய்து சிறையில் அடைத்தான் அரசன். அரசனது முன்னோர்கள் வைத்திருந்த இந்த இரகசிய வழி அரசனுக்கே தெரியவில்லை. இதை எப்படியோ அறிந்த அமைச்சன், இத்தனை நாட்களாக இரகசிய வழியில் நுழைந்து நகை திருடிய விடயம் இப்போது தான் புரிந்தது. மதினை பாராட்டிய மன்னன் அவனையே தன் அமைச்சனாக்கிக் கொண்டான். பேயால் தனக்கு கிடைத்த வாழ்வை எண்ணி மகிழ்ந்ததுடன், தனது நேர்மைக்கும் துணிவுக்கும் கிடைத்த பரிசு தான் இது எனப் பெருமிதம் கொண்டான் மதின்.

## தொடர் வண்டி

நீண்ட வண்டி தொடர் வண்டி
நீண்ட தூரம் போகும் வண்டி

தண்டவாளத்தில் அது போகும்
தட தட வென்று விரைந்தோடும்

“கூ”.... என ஒலிப்பது புகை வண்டி
“பாம்”.... என ஒலிப்பது மின் வண்டி



பச்சை, சிவப்பு கொடி இரண்டை
நிலையைத் தலைவர் காட்டிடுவார்

சிவப்பைக் காட்டினால் நின்றுவிடும்
பச்சையைக் காட்டினால் பாய்ந்தோடும்

## சிந்தனை துளிகள்

- “பணக்காரனாக ஆவதற்கு பணத்தைச் சேர்த்து வைக்க வேண்டியதில்லை. தேவைகளைக் குறைத்துக் கொண்டாலே போதும்” -ஸ்பெயின்
- “போலியான நண்பனாக இருப்பதைவிட, வெளிப்படையான எதிரியாக இருப்பது மேல்” -இங்கிலாந்து
- “அன்பை விலைக்கு வாங்குவது சுயநலமொன்றே, ஆகவே எச்சரிக்கையாய் இரு உன் அன்பர்களிடம்.” -படித்ததில் பிடித்தது
- “செழிப்பான பண்ணையிலிருந்து குதிரையை வாங்கு, ஏழை வீட்டிலிருந்து பெண்ணை எடு” -எஸ்டோனியா

உங்களுக்கு யார் எது செய்தாலும் எது சொன்னாலும் நீங்கள் நல்லதையே செய்யுங்கள்.

~ அரேலியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் தீர்மானிக்கட்டும்

தமிழ் அரசியல் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலில் போட்டியிடுவது தமிழினத்துக்கு ஆரோக்கியமானதல்ல என்பது தமிழர் நலன் சார்ந்தவர்களின் கருத்து.

அந்தக் கருத்தில் நிறைந்த உண்மைகளும் நியாயப்பாடுகளும் உண்டு.

ஆனால் தமிழ் அரசியல்வாதிகளின் ஒற்றுமை என்பது இதுவரை சாத்தியப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூட ஒற்றுமைப்பட முடியாமல் போயிற்று.

கூட்டமைப்பில் இருந்து சில அரசியல் கட்சிகள் வெளியேறுகின்ற சூழ்நிலைகளும் ஏற்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்து அதனை சரியான பாதையில் வழிநடத்திச் செல்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தயாராக இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சியின் முகவரியுடன் அந்தக் கட்சியின் கட்டுப்பாட்டில் கூட்டமைப்பு இயங்க வேண்டுமென்பதாக இருந்தது.

இதனால் கூட்டமைப்பு பலவீனப்படுகின்ற நிலைமைக்கு வருவது தவிர்க்க முடியாததாயிற்று.

இத்தகையதோர் சூழ்நிலையில், மாற்றுத் தலைமையின் அவசியம் உணரப்பட்டது. தமிழ் மக்களின் நலன்களை; அவர்களின் உரிமைகளை; இனப்பிரச்சினைக்கான தீர்வை கூட்டமைப்புக் கவனித்துக் கொள்ளும் என்று நாம் பேசாதிருந்தால், இருப்பதையும் இழக்க வேண்டி வரும் என்று தமிழ் மக்கள் நினைத்தனர்.

இதன் அடிப்படையில் தமிழ் மக்களின் நலன் மற்றும் உரிமைசார் விடயங்களில் கருசனை கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்ப்பற்றாளர்கள், சமயத் தலைவர்கள் எனப் பல தரப்பினரையும் உள்ளடக்கிய மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை உதயமாகியது.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவராக வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டார்.

இஃது தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் பலரையும் ஈர்ப்புச் செய்தது.

பேரவையின் நடவடிக்கைகள் மிகப்பெரும் விழிப்புணர்வை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியபோது,

தமிழர்களுக்கான தலைமையை நீதியரசர் விக்னேஸ்வரன் ஏற்க வேண்டும் என்ற கோரிக்கை களத்திலும் புலத்திலும் எழுந்தன.

இந்நிலைமை முக்கிய மாற்றங்கள் ஏற்படக் காரணமாயிற்று.

எனினும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவது என்ற விடயத்தில் உடன்பாடு எட்டப்படுவதில் சிக்கல்களும் குழப்பங்களும் இருக்கவே செய்கின்றன.

அதாவது தமிழர்களின் உரிமை என்ற விடயத்தை மையப்படுத்திக்கூட தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவது கடினம் என்பதால்,

அவற்றை ஒற்றுமைப்படுத்துவது பட்டமரத்துக்கு நீர் பாய்ச்சுவதாகவே இருக்கும்.

ஆகையால் எந்த தமிழ் அரசியல் கட்சியை தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமையாக ஏற்கிறார்களோ அவர்களை அங்கீகரிப்பது என்ற முடிவுக்கு வருவதுதான் இப்போதிருக்கின்ற ஒரே வழி.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதுதான் யதார்த்தமான உண்மை.

# வியாபார நடவடிக்கையின்போது வியாபாரி ஒருவர் மரணம்

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் கடந்த 40 வருடங்களாக நடைபாதையில் வியாபாரம் மேற்கொண்ட வியாபாரி ஒருவர் நேற்றுக் காலை தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முயன்றபோது உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா இலுப்பையடி, தினச்சந்தைக்கு முன்னாலுள்ள சந்தை சுற்றுவட்ட வீதியில் நீண்டகாலமாக சுமார் 40 வருடங்களுக்கு மேலாக வியாபாரம் மேற்கொண்டுவரும் வியாபாரி நேற்றுக் காலை 6 மணியளவில் கடை ஒன்றில் தேநீர் குடித்துவிட்டு தனது நடைபாதை வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முற்பட்டபோது, தர்மலிங்கம் வீதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றிற்கு முன்னால் சாய்ந்து இருந்த நிலையில் திடீரென்று கீழே வீழ்ந்துள்ளார்.

இதைக்கண்ட ஏனைய வியாபரிகள் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோதும் ஏற்கெனவே எடுத்து வரும் வழியில் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

155ஆம் கட்டை இரணைமடு கிளிநொச்சியைச் சேர்ந்த 62 வயதுடைய நடைபாதை வியாபாரியே நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் ஆரம்ப விசாரணைகளின் போது மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பெற்றோலிய வளங்களை அபிவிருத்தி செய்வது குறித்து

### இலங்கை - இந்தியா இடையே பேச்சு

(கொழும்பு)

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செய்வது தொடர்பாக இலங்கை - இந்தியாவிற்கு இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

அமைச்சர் கபீர் ஹாஷீம் மற்றும் இந்தியாவின் பெற்றோலிய வளங்கள் அமைச்சர் தர்மேந்திர பிரதன் ஆகியோருக்கு இடையில் குறித்த பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இருநாட்டு அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேலும் இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சியை மையமாகக் கொண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளும் முகமாக அமைச்சர் கபீர் ஹாஷீம் இந்தியாவிற்கு சென்றுள்ள நிலையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 4 பரல் கோடாவுடன் 16 வயது சிறுவன் கைது

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிசொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் நான்கு பரல் கோடா கைப்பற்றப்பட்டுள்ளதோடு, சந்தேகத்தன் பெயரில் 16 வயது சிறுவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேட மாவட்ட போதை ஒழிப்பு பிரிவினரால் நேற்று குறித்த கோடா பரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மாவட்ட விசேட போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைவாக பிரிவின் பொறுப்பு அதிகாரி சத்துரங்க தலைமையில் சென்ற ஏழு பேர் அடங்கிய குழுவினரே இதனை கைப்பற்றியுள்ளனர்.

இதில் நான்கு பரல்கள் கோடாவும் 21 கசிப்புப் போத்தல்களும் காணபட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட கோடா மற்றும கைது செய்யப்பட்ட சிறுவனையும் குறித்த பிரிவினர் தரமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ம-3)

## போதைப்பொருள் பரிமாற்றும் கேந்திர நிலையமாக இலங்கை

### ரோஹித அபேகுணவர்த்தன

அரசியல்வாதிகளின் தேவைகளின் காரணமாக போதைப்பொருட்களை பரிமாற்றும் கேந்திர நிலையமாக இலங்கை காணப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன முன்னணியின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் இன்று பாதாள குழுவினரது செயற்பாடுகளும், போதைப்பொருட்களின் வியாபாரமும் பகிரங்கமாக இடம்பெறுகின்றது. கடந்தகால அரசாங்கத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்ட இக் குற்றங்கள் இன்று அரசாங்கத்தின் ஆதரவுடன் இடம்பெறுகின்றது.

ஆகவே டுபாயில் கைது செய்யப்பட்ட பாதாள குழுவின் தலைவன் மாகந்துரே மதூஷ் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டால் தகுந்த தண்டனையை இந்த அரசாங்கம் வழங்கும் என்று சிறிதளவும் நம்பிக்கை கொள்ள முடியாது என்றார். (ம-3)

## இந்தியா பயணமானார் சந்திரிகா குமாரதுங்க

2019ஆம் ஆண்டுக்கான உலக பேண்தகு அபிவிருத்தி உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவிற்குச் சென்றுள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்கான உலக பேண்தகு அபிவிருத்தி உச்சி மாநாடு நேற்று (திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை புதுடெல்லியில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு 'அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் நிலையான உலகின் ஒரு பார்வை' என்ற தலைப்பில் அவர் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 'தி ஹிந்து' ஊடகத்தினால் நடத்தப்படும், இரண்டு நாள் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக பெங்களூருக்கு மகிந்த ராஜபக்ஷ சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணி வரை யாழ்.பிரதேசத்தில கொழும்புத்துறை, நெடுங்குளம், மணியம்தோட்டம், உதயபுரம், மணியம்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஆண்டிய புளியங்குளம், புதுக்குளம், பட்டாணிச்சூர் கிராமம், லக்ஸபானா வீதி, தோணிக்கல ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம் பெரிய கரைசல் பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனதிற்குள் புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி. வெறும் புள்ளி விபரங்களை சேகரிப்பது கல்வியல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதே அதன் அடிப்படை லட்சியம்.
- ஒவ்வொரு மனிதனும் கட்டளையிடவே விரும்புகிறான். கீழ்ப்படிவதற்கு யாரும் தயாராக இல்லை. முதலில் கீழ்ப்படிய கற்றுக் கொள். கட்டளையிடும் பதவி தானாக வந்து சேரும்.
- சிரத்தையோடு செயல்படுவதுதான் இப்போது நமக்கு அவசியமான ஒன்று. மனிதனுக்கு மனிதன் வேறுபடுத்திக் காட்டுவது இந்த சிரத்தை மட்டுமே.
- மனவலிமையுடன் சிரத்தை கொண்டவர்களாக மாறுங்கள். கேலி பேசுவது, புறம் பேசுவது, வீண்பொழுது போக்கு அம்சங்களில் கவனம் செலுத்துவதை அறவே கைவிடுங்கள்.
- "சீர்திருத்தம்" என்ற வார்த்தையைச் சொல்லத் தேவைஇல்லை. மாறாக "முன்னேறிச் செல்" என்று சொல்லுங்கள். சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டு முன்னேறுங்கள்.

# தாருகாஷ்-கனிஸ்ரன் அதிரடி கல்வியங்காடு பாபா சம்பியன்







உடுவில் றொப் II விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய மாபெரும் துடுப்பாட்டச் சுற்றுத் தொடரை கல்வியங்காடு பாபா விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது. பலம் வாய்ந்த பல அணி களை வெற்றி கொண்டு இறு திப் போட்டிக்கு கல்வியங்காடு பாபா அணி மற்றும் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் தெரிவாகியது. இறுதிப் போட்டி யில் நாணயச் சுழற்சியில் வென்ற கார்மேல் போய்ஸ் அணி களத்தடுப்பைத் தீர்மா னித்தது. அதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய பாபா அணி க்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் களாககளமிறங்கியதாருகாஷ், கனிஸ்ரன் ஆகியோர் அதிரடி யான அடித்தளம் இட்டனர். எதிர் அணி பந்து வீச்சாளர் களின் பந்து வீச்சை நான்கு திசைகளுக்கும் ஆறு ஓட் டங்க ளாக மாற்றி அமைத் தனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய இவர்கள் எதுவித விக்கெட் இழப்புகளும் இன்றி 5.3 பந்து பரிமாற்றங்களில் 110 ஓட்டங்களை இணைப்பாட் டமாக பெற்றுக் கொண் டனர்.

நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர் நிறைவில் கல்வியங்காடு பாபா விளையாட்டுக் கழகம் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தாரு காஷ் ஆட்டம் இழக்காமல் 56 ஓட்டங்களையும் கனிஸ் ரன் 44 ஓட்டங்களையும் பெற் றுக் கொண்டனர். பதிலுக்கு 117 என்ற வெற்றி இலக் குடன் துடுப்பெடுத்தாடிய கார் மேல் போய்ஸ் அணி ஒருபுறம் விக் கெட்டுக்களை இழந்தாலும் மறுபுறம் ரகீம் தனி ஒருவராக அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியை சரிவில் இருந்து மீட்டார். ஆட்ட இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்களை எடுத் தால் வெற்றி எனும் நிலை யில் தனது அபரிமிதமான பந்து வீச்சின் மூலம் ரகீமின் விக்கெட்டை வீழ்த்தி ஜன தர்சன் பாபா அணிக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்தார். அதி ரடியாக துடுப்பெடுத்தாடி ஆட் டம் இழக்காமல் 56 ஓட்டங்கள் பெற்ற தாருகாஷ் ஆட்ட நாய கனாகவும் தொடர்ந்து சிறப் பாக விளையாடிய கனிஸ் ரன் தொடரின் நாயக னாகவும் தெரிவு செய்யப் பட்டனர். (கு)

வேலணைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 2,3 ஆம் திகதிகளில் வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. இப் போட்டியில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி சார்பாகப் பெண்கள் பிரிவில் பங்கு பற்றிய அ. எரோமி 400, 200 மீற்றர் ஓட்டங்களில் முதலாம் இடத்தையும் அ.சொப்பியா நீளம் பாய்தலில் 2 ஆம் இடத்தையும் 800 மீற்றர் ஓட்டத்தில் 3 ஆம் இடத்தையும் எட்வின் லியோனா 5000 மீற்றர் ஓட்டத்தில் 1 ஆம் இடத்தையும் 800 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் 1500 மீற்றர் ஓட்டத்தில் 3 ஆம் இடத்தையும் ஆண்கள் பிரிவில் ஜெகஸ்ரின் 5000 ,1500மீற்றர் ஓட்டங்களில் 1 ஆம் இடத்தையும் ரா. அயுஸ்ரன் 10000 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடத்தையும் 5000 மீற்றர் ஓட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.



# பணத்திற்கு மதிப்புக் கொடுப்பதால் இலங்கை அணியின் நிலை இது

## முரளிதரன் கவலை



உலகக் கோப்பை போட்டியில் மூன்று முறை இறுதிச் சுற்றுக்கு சென்ற இலங்கை அணி தற்போது மோசமான நிலையில் இருப்பது வருத்தமளிக்கிறது என்று முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் கவலை தெரிவித்துள்ளார்


செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கை கிரிக்கெட் சபை கடந்த 3, 4 ஆண்டுகளில் திறமையான வீரர்களை உருவாக்கவில்லை. திறமையான வீரர்கள் கிடைத்தாலும், அவர்கள் எப்படி விளையாட வேண்டும் என்று அறிந்திருக்கவில்லை.

நான் ஓய்வுபெற்ற பின்னர் கிரிக்கெட் சபையுடன் தொடர்பிலில்லை.

நாங்கள் கிரிக்கெட் விளையாடிய காலங்களில் பணம் பெரிய விடயமாக இல்லை. விக்கெட், ஓட்டம் எடுப்பதில் கவனம் செலுத்தினோம். ஆனால் இப்போதைய நிலைமை வேறாக உள்ளது. பணத்துக்கு மதிப்புக் கொடுத்தால் கிரிக்கெட்டின் தரம் குறைந்து விடும் எனக் கூறியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்









முல்லைத்தீவு - குமுழமுனை மகாவித்தியாலயத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் திற னாய்வுப் போட்டிகள் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது. (க-281)





முல்லைத்தீவு-கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையில் 2019 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் பாடசாலையின் முதல்வர் ந.கருணாகரன் தலை மையில் இடம்பெற்றன. (கு)

# விக்னேஸ்வரனுடன் இறங்கிச்செல்ல த.தே.ம.முன்னணி தயாரில்லை

## சட்டத்தரணி வி.மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் எதிர்பார்ப்பது போன்று இறங்கிச் செல்வதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ அதன் தலைவரோ தயாராக இல்லை. தேர்தல் கூட்டணி அமைப்பதற்காகவோ அல்லது எவருடைய எதிர்பார்ப்புக்காகவோ நாம் எமது கொள்கையிலிருந்து இறங்கமாட்டோம்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் அதன் பேச்சாளருமான சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்தார்.

எனது அரசியல் குறிக்கோள் எனக்கு மிகவும் அவசியம். அந்த வகையில் எம்முடன் கொள்கை ரீதியாக உடன் பயணிப்பவர்களின் கூட்டங்களில் கலந்து கொள்வது பிழையாகாது.

அதனால்தான் ஐங்கரநேசனின் கூட்டங்களில் நான் பங்குபற்றி வந்துள்ளேன். அனந்தியின் கூட்டங்களிலும் பங்குபற்றுவேன். கஜேந்திரகுமார் சற்று இறங்கி வந்தால் அவரின் கூட்டங்களிலும் பங்குபற்றுவேன் என்று முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதுதொடர்பில் எழுப்பிய கேள்விக்கே தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

நீதியரசர் விக்னேஸ்வரன் மீது எமக்கு தனி மரியாதை உண்டு. அவர் கொள்கையில் உறுதியாக உள்ளார். ஆனால் அவர் எதிர்பார்க்கும் வகையில் சற்று இறங்கிச் செல்வதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ அதன் தலைவரோ தயாராகவில்லை.

எமது நிலைப்பாட்டை நன்கு அறிந்த அவர் இவ்வாறான கருத்தை ஏன் முன்வைத்தார் என்பது தெரியவில்லை. தேர்தல் கூட்டணி ஒன்றுக்காக நாம் எமது கொள்கையிலிருந்து சற்றும் கீழிறங்கத் தயாரில்லை என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மேலும் தெரிவித்தார். (ம-3)

# யாழில் ஹெரேயினுடன் இளைஞன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்கும்பான் பகுதியில் ஹெரோயின் போதை பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றசாட்டில் இளைஞர் ஒருவரை நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மண்கும்பான் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் வீட்டில் ஹெரோயின்போதை பொருளை வைத்திருப்பதாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபரின் வீட்டுக்கு சென்ற பொலிஸார் நபரை கைது செய்து அவரை சோதனையிட்ட போது அவரிடமிருந்து நான்கு சிறு பொதிகளில் அடைக்கப்பட்ட ஹெரோயின் போதை பொருளை மீட்டனர்.

மீட்கப்பட்ட போதை பொருள் 300 மில்லி கிராம் எனவும், கைது செய்யப்பட்ட நபர் கைது செய்யப்படும் போது போதையில் இருந்தார் எனவும் அவரிடம் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு மூன்று நாட்கள் தொடராக நடத்திய மாபெரும் முத்தமிழ் பெருவிழா பெருந்திரளான மக்கள் கூட்டத்தோடு பாரம்பரிய கலைகளின் வெளிபாட்டோடு மிகவும் சிறப்பாக நேற்றையதினம் நடைபெற்று முடிந்தது. (ம-3)



# யாழில் கேபிள் கம்பங்கள் அகற்றிய விவகாரம் தொடர்பான

## சீராய்வு மனு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கேபிள் கம்பங்கள் அகற்றிய விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு மீதான விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கேபிள் கம்பங்களை யாழ்ப்பாண மாநகர முதல்வர் அகற்றியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குத்தள்ளுபடி செய்யப்பட்டது.

இதனை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், குறித்த மனுவை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேலும் குறித்த சீராய்வு மனுவின் பிரதிவாதிகள் முறையே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சட்ட மா அதிபர், மாநகர முதல்வர் இ.ஆனோல்ட், மாநகர ஆணையாளர் ஜே.ஜெயசீலன் ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்ப நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

# போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு ரணில் அரசே புத்துயிர் அளித்தது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதைப் பொருள் வர்த்தகத்திற்கு ரணிலின் அரசே மீண்டும் புத்துயிர் அளித்தது என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரைச் சேர்ந்தவர்களுமே மறைமுகமாக உதவுகின்றார்கள்.

உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருக்கும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு பிரதமர் ரணிலின் அரசு தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது.

இவர்களின் இந்த செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் தெரிந்த விடயம். போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராகவும் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கும் சில அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு முடிவு கட்டப்பட்டிருந்தது. ஆனால் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் மீண்டும் போதைப் பொருள் வர்த்தகத்துக்கும் பாதாள உலகக் குழுவினருக்கும் தாராளமாகச் சுதந்திரம் அளிக்கப்பட்டது என விமல் வீரவன்ச மேலும் குறிப்பிட்டார். (ம-3)

# மகளை கொலை செய்த தந்தைக்கு மரண தண்டனை

## அநுராதபுர மேல் நீதிமன்றில் தீர்ப்பு

(அநுராதபுரம்)

சித்திரவதைக்கு உள்ளாக்கி தனது மகளை கொலை செய்த தந்தைக்கு, அநுராதபுரம் மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மூன்றரை வயதான தனது மகளை சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில், குற்றவாளியாக இனங்காணப்பட்டதையடுத்து குறித்த நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க, முறைப்பாட்டாளர்களுக்கு இயலுமாக இருந்ததாக வழக்கின் தீர்ப்பை அறிவித்த, வட மத்திய மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி மஹேஷ் வீரமன் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, கொலை செய்த குற்றத்திற்கான தண்டனையாக பிரதிவாதிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக மேல் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார்.

தம்புத்தேகம, ஹுரிகஸ்வெவ சம்பத்கமவைச் சேர்ந்த காமினி என்றழைக்கப்படும் இங்குருவத்த கெதர சேனாரத்ன என்பவருக்கே மரண தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 21ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாளொன்றில் ஹுரிகஸ்வெவ சுதர்ஷனகம சம்பத்கமவில் சதுனிக்கா உபேக்ஸா லக்மாலி என்ற சிறுமியை பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தி கொலை செய்ததாக சட்டமா அதிபரினால் பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### வாக்குறுதியை...

பெற்றுள்ள கடிதத்தை நான் அவரிடம் சமர்ப்பிப்பேன் எனவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மனோகணேசன், பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலத்தில் அவரது அமைச்சின் 70 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வரும் பாடசாலை வகுப்பறை கட்டடத்தை பார்வையிட்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இன்றைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் எல்லோரும் இணைந்து உருவாக்கிய அரசாங்கமாகவே உள்ளது. ஜனாதிபதிக்கும் இங்குள்ள மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த காரணத்தினால் தான் ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமராக இருக்கின்றார். ஆகவே அவர்கள் இருவரும் தங்களுக்குள் சண்டை பிடிப்பதாக இருந்தாலும் அவர்களுக்குள் முறுகல் இருந்தாலும் அது அவர்களுடைய விடயம்.

ஆனால் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அவர்கள் மீறமுடியாது. இதனை நான் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து கொண்டு தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முடி மறைத்து பேசுபவன் அல்ல. நேரடியாக பேசுபவன். இங்கு வந்து வாக்குகளை வாங்கிவிட்டு வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு காணாமல் போய்விட்டு அடுத்துவரும் தேர்தலின்போது வரும் அரசியல்வாதியல்ல மனோ கணேசன் என்றார். (ம-3)

### மன்னார் மனித...

மனித எச்சங்கள் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வுக் கூடத்தில் காபன் பரிசோதனைக்காக கடந்த மாதம் 25ஆம் திகதி கையளிக்கப்பட்டன.

மனித எச்சங்களின் 6 மாதிரிகள் மீதான காபன் பரிசோதனைக்கு இரண்டு வாரகால அவகாசம் கோரப்பட்டது.

ஆய்வறிக்கையை பார்வையிடுவதற்கான இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதி தமக்கு வழங்கப்பட்டுள்ளதால், ஆய்வின் முடிவை இணையத்தளத்தினூடாக பார்வையிட முடியும்.

எனினும், அறிக்கையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளைத் தனக்கும், மன்னார் மாவட்ட நீதிவானுக்கும் பொதி சேவையூடாக அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சட்ட மருத்துவ நிபுணர் சமிந்த ராஜபக்ச தெரிவித்தார். இதேவேளை, மன்னார் சதொச கட்டட வளாகத்திலுள்ள மனித புதைகுழியில் 141 ஆவது நாளாக நேற்றும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் 315 மனித எச்சங்கள் அடையாளங் காணப்பட்டுள்ள நிலையில், 307 மனித எச்சங்கள் குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 26 மனித எச்சங்கள் சிறார்களுடையது என சட்ட மருத்துவ நிபுணர் குறிப்பிட்டார். (ம-3)

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 2019/02/11 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3853 |
| ஆங்கில எழுத்து | R |
| வெல்லப்பட்ட இலக்கங்கள் | 1 7 0 2 4 2 |

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 2019.02.11 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2032 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெல்லப்பட்ட இலக்கங்கள் | 11 27 39 50 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 11/02/2019 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 343 |
| வெற்றி எழுத்து | I |
| சுப்பர் இலக்க | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 09 18 42 75 |

**சுபிரி வாசனா**

| | |
|---|---|
| திகதி | 2019/02/11 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1403 |
| எழுத்து | 20 |
| வெற்றி இலக்கம் | 06 45 46 67 05 36 |

தேசிய லொத்தர் சபை

## ஜனாதிபதியுடன்...

னைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு ஜனாதிபதியுடன் சண்டையிட்டுக் கொள்ள வேண்டிய தேவை இல்லை. எதிர்வரும் காலங்களில் நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது பிரதான நோக்கமாகும். தீர்க்க முடியாத பிரச்சினை என எதுவும் எம்மிடையே இல்லை.

அரசாங்கத்தை கொண்டு செல்ல உண்மையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையில்லை. மகிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றவுடன், அவருக்கு எதிராக பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தது.

அதேபோல், பிரதமர் ரணிலுக்கும் இருந்தால் மட்டுமே சிக்கல் ஏற்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் இன்னும் எமக்கான ஆதரவை வழங்கிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தான் கடந்த காலத்தில் நாட்டில் இடம்பெற்ற அரசியல் சூழ்ச்சியை முறியடித்தோம் என அமைச்சர் தயாகமகே மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## வாகனம் ஒன்றின்...

உள்ள வீடு ஒன்றுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றின் மீதே குறித்த தாக்குதல் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் கொண்ட கும்பலொன்றே இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தாக்குதல்தாரிகள் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த இடத்தில் பெற்றோல் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதோடு வீட்டின் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கி சென்றுள்ளார்கள்.

இதனால் குறித்த வாகனம் முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளதுடன், வீடும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## மகிந்த ராஜபக்ஷ...

தானிகள், உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள், பேராசிரியர்கள் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் இவ்வாண்டுக்குள் மாற்றமொன்று நிகழும் என அவர்கள் அனைவரும் எதிர்பார்த்துள்ளனர். அதுமாத்திரமின்றி நாட்டில் மகிந்த தலைமையில் புதிய அரசாங்கமொன்று தோற்றம் பெறும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஆனால், ஆட்சியை கைப்பற்றுவது எமது நோக்கமல்ல. பத்து ஆண்டுகளுக்கு நாட்டை ஆட்சி செய்யக்கூடிய அடித்தள கொள்கை ஏற்படுத்துவதே எமது நோக்கம்.

இது தெற்கிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல. வடக்கு- கிழக்கையும் உள்ளடக்கிய கொள்கை திட்டமொன்றை ஸ்தாபிப்பதே எமது கட்சியின் குறிக்கோள் எனவும் அவர் தெரிவித்தார். (ம-3)

## அரிசி ஆலைக்கு...

படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுடன் நேற்று பிற்பகல் பத்தரமுல்ல அபேகம வளாகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்தார்.

இத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு அரச கொள்கைகளுக்கு அமைவாக அனைவருக்கும் உயர்ந்தபட்ச சலுகைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

அதேபோன்று வளர்ச்சியடைந்துள்ளோருக்கே மேலும் முன்னேறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தாது வீழ்ச்சியடைந்துள்ளோரை மீண்டும் கட்டியெழுப்புவதற்கே அரச கொள்கைகளுக்கு அமைவாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் வறுமையிலுள்ள மக்களை முன்னேற்றுவதற்கு முன்னுரிமையளித்து விரிவான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புதிய பொருளாதார முறைகளுடன் அரச மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்காக வலுவான பயணமொன்றினை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

விவசாய அமைச்சர் பீ.ஹரிசன், பொது வழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தல்லாத அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம-3)

## முள்ளிவாய்க்கால்...

ப்பதற்கு பல்கலை நிர்வாகத்தால் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனால் ஆரம்ப கட்ட வேலையுடன் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்று குறித்த தூபியை முழுமையாக பல்கலை மாணவர்கள் நிறுவியுள்ளனர். இறுதி யுத்தத்தின் போது படுகொலை செய்யப்பட்ட பல்கலை மாணவர்கள், தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் உறவுகள் என பலருடைய நினைவாக இந்த தூபி பல்கலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த தூபியின் இறுதிக்கட்ட வேலைகள் நிறைவுசெய்யப்பட்டு இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவு தூபியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-9)

## வடக்கின் பிரச்சி...

கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த சுத்தமான வலு மற்றும் சுகாதாரம் என்ற தொனிப்பொருளிலான சர்வதேச மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த நோர்வே தூதுவர் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், யாழ்ப்பாண பாதுகாப்பு படை அணிகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி மற்றும் வட மாகாணத்துக்கான பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன், யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் நோர்வே தூதுவர் சந்தித்திருந்தார்.

வட மாகாணத்தில் காணப்படும் அபிவிருத்திக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் தொடர்பாகத் தெளிவான புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த சந்திப்புகள் நோர்வே தூதுவருக்கு உதவியாக அமைந்திருந்ததாக நோர்வே தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## இனவாதிகளின்...

மான ஒன்றாக இருக்கிறது. இதனை நாம் பலவந்தமாகக் கொண்டுவர முடியாது.

அனைத்து மக்களின் ஒத்துழைப்புடன், அவர்களின் எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்யக் கூடிய வகையிலேயே அது அமையப்பெற வேண்டும். எவ்வாறாயினும் ஒற்றையாட்சி, பௌத்தத்திற்கு முன்னுரிமையுடன் தான் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும். இதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

இனவாதிகள் தான் இது தொடர்பில் பொய்யான கருத்துக்களை கூறிவருகிறார்கள். இவ்வாறான ஒரு அரசியலமைப்பு ஒரு இனத்துக்கோ, மதத்துக்கோ அல்லது கட்சிக்கோ மட்டும் மட்டுப்பட்டதாக இருக்காது.

இலங்கையர் எனும் அடிப்படையில்தான் இந்த அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். இந்தப் பிரச்சினையை நாம் வெகுவிரைவில் தீர்ப்போம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## ஐக்கிய நாடுகளி...

ஆகிய நாடுகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கை உட்பட 37 நாடுகளில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட 760 முறைப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது, சுயாதீனமாக இயங்கும் மனித உரிமை வல்லுநர்கள் ஐந்து பேர் கொண்ட குழுவினர் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்களை சந்தித்து உரையாடவுள்ளனர்.

இதுதவிர, பல நாடுகளை சேர்ந்த அரச அதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் ஏனைய மனித ஆர்வல உறுப்பினர்களும்கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சரஜீவோவில் நடைபெறும் அமர்வின் போது, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகளை கொண்ட நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளின் விஜயம், இனம் காணப்பட்ட முறைப்பாடுகளை அமுல்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஜனநாயக தேசிய...

ஜனநாயகம் மற்றும் நீதித்துறையின் சுயாதீன தன்மையினை பாதுகாத்து சுதந்திரமான சமூகமொன்றை உருவாக்குவோம் எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கான புதிய தேர்தல் தொகுதி அமைப்பாளர்களுக்கு நியமனக்கடிதங்களை வழங்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் ஆறு தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் ஏனைய அனைத்து அமைப்பாளர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை முறையாக நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை முறையாக நடைமுறைப்படுத்துவதில் தவறு இழைப்பார்களானால் அவர்கள் மீது கட்சி ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (ம-3)

100க் கணக்கானோருக்கு உள்நாட்டு வேலை
50க்கும் மேற்பட்டோருக்கு வெளிநாட்டு வேலை
20க்கும் மேற்பட்டோருக்கு மாணவர் விசா
வழங்கி
10வது ஆண்டில் கால்பதிக்கும்
SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
மூலம் வழங்கும்
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
தொழில் தகைமைச் சான்றிதழ் மற்றும் தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு
உடனடியாகவே...
தொழில் தெரிந்திருந்தும் தகைமைச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு
சர்வதேசதர சான்றிதழ் ஏற்பாட்டுடன்...
தொழில் தகைமைச் சான்றிதழ். அனுபவம் இல்லாதவர்களுக்கு
வெளிநாட்டு வேலை & விசா ஏற்பாட்டுடனான
15க்கும் மேற்பட்ட துரித கற்கைநெறிகள்
கட்டணம் ரூ.10000 முதல்
0777 324 004
077 36 16 798
021 222 00 11
021 221 9 221
(C-5467)
221 - 1/1, மின்சாரநிலைய வீதி,(2ம் ஒழுங்கை)
(The Lover கடைக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம்

வாடகைக்கு
நல்லூரில் 2 அறைகள் (A/C, Non A/C) உள்ள வீடு சமைக்கும் வசதியுடன் நாள், கிழமை மற்றும் மாத வாடகைக்கு உண்டு. வெளியிலிருந்து வருபவர்களுக்கு ஏற்றது.
தொடர்பு: 077 788 7360

இந்திரா கொன்ஸ்ரக்சன்ஸ்



எமது சேவைகள்
01. புது வீடு கட்டுதல் (1 சதுர அடி 3,000/=லிருந்து)
02. குறையாக கட்டிவிடப்பட்ட வீடுகள் பூரணப்படுத்தல்.
03. பழைய வீடுகள் நவீன முறையில் புனரமைப்புச் செய்தல்.
04. வீட்டுடன் இணைந்த நவீன குளியலறை (Modern Attach Bathroom) அமைத்தல்.
05. தண்ணீர் தாங்கி (Tank) கட்டுதல்.
06. பிளாற் (SLAB) போடுதல்.
07. வீட்டிற்கு கூரை போடுதல்.
08. நிலத்திற்கு மாபிள் (Tile) பதித்தல்.
09. வீட்டிற்கு மட்ட சீற் அடித்தல்.
10. மதில் கட்டுதல்.
குறிப்பு : குறிப்பிட்ட காலத்துக்குள் முடித்துக்கொடுக்கப்படும். தரமாக, நவீன தொழில்நுட்ப முறை மூலம் குறைந்த செலவில் அமைத்துத்தரப்படும். தேவையாயின் வங்கி கடன் ஒழுங்கு படுத்தப்படும்.
(C-5459)
Tel: 0786155929 - Viber: 0786371396
பலாலி வீதி, கோண்டாவில்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு




(C-5439)
DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

குத்தகைக்கு இடம் தேவை
யாழ். மாவட்டத்தில் நீர், மின் சார வசதி கொண்ட ஆறு பரப்பு காணி தேவை.
தொடர்புகளுக்கு:
077 983 8162
(7489)

வேலையாள் தேவை
நல்லூரில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றுக்கு உதவி ஆள் உடன் தேவை.
தொடர்புகளுக்கு:
077 025 6640
(7489)

## துயர் பகிர்கின்றோம்



அமரர் நாகலிங்கம் முருகையா

எமது கல்லூரியின் கணித பாட ஆசிரியர் திருமதி த.கோணேஸ்வரா அவர்களின் அன்பு மாமனார் அமரர் நாகலிங்கம் முருகையா அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(C-5464)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.